
# திருமறை ஆசான்

புதிய ஏற்பாட்டுத் தூய கிறிஸ்தவ மாத இதழ்

மலர் 2 | ஆகஸ்டு 1989 | இதழ் 8




வெளியிடுவோர் :

ஈரோடு கிறிஸ்துவின் சபையார்,

2, மணல்மேடு வீதி, ஈரோடு-638 002.

நீங்கள் ஈரோட்டில் இருக்க நேர்ந்தால் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு கர்த்தருடைய பிள்ளைகளோடு சேர்ந்து ஆராதியுங்கள்.

இடம் : **2, மணல்மேடு வீதி, ஈரோடு-638002**

## நாளும் நடப்பும்

ஞாயிறு : காலை 9-30—11-00...காலை ஆராதனை
,, : ,, 11-00—12-00...ஞாயிறு பள்ளி
,, : மாலை 7-15—8-30...மாலை ஆராதனை
செவ்வாய் : மாலை 7-15—8-30...ஜெபக்கூட்டம் (மாதவக்காடு)
புதன் : மாலை 3-30—5-00 . சகோதரிகள் ஐக்கிய கூட்டம்(ஒருவாரம்விட்டு ஒருவாரம்)
வியாழன் : மாலை 7-15—8-30...வேதாகம ஆய்வு
சனி : மாலை 7-00—9-00...மன்றாட்டு ஜெபம்

## இதழின் உள்ளே


நீங்களே தீர்ப்பளியுங்கள். 1
ஆத்தும ஆதாயம் உங்கள் பிரதான நோக்கமாயிருக்கட்டும் 5
இறுதித் தீர்ப்பில் நீங்கள் எந்தப் பக்கம்? 9
தெரிந்து கொள்ளுங்கள் 12
கிறிஸ்தவர்கள் - அன்றும், இன்றும். 17
ஓர் நற்செய்தி! 19
மரணத்திற்குப் பின் மனம் திரும்புதல் கிடையாது 23
மத்தேயு எழுதிய நற்செய்தி நூல் 24
பின்வாங்கிப் போனவர்கள் மெய் மனஸ்தாபப் பட்டு கர்த்தரிடத்தில் வந்தால் ஏற்றுக் கொள்வார் 27

# THIRUMARAI AASAAN

Editor : E. Z. SELVANAYAGAM

Honorary Editor J. C. CHOATE

**Published by Church of Christ**

**2, Manalmedu Street, ERODE-638 002. Tamil Nadu. India**

**Pleading for the restoration of pure New Testament Christianity**

Vol 2. August — 1989 Issue 8


**ஆசிரியவுரை**

# நீங்களே தீர்ப்பளியுங்கள்.

தற்காலத்தில் செய்தித்தாள்களைத் திறந்தால் முதலில் நம்முடைய கண்களில் படுவது "கட்சியில் பிளவு" கட்சியை உடைக்கக் கோடிக்கணக்கான பணம் கைமாறியது" என்பன போன்ற செய்திகள் தான். இது ஏதோ புதுமை என்று திகைக்காதீர்கள். சாத்தான் நீண்ட நாட்களாகவே இப்போர் முறையை பயன்படுத்தி, இயேசுகிறிஸ்து தம் சொந்த இரத்தத்தைச் சிந்திக் கட்டிய (மத் 16:18) தம் சரீரமாகிய சபையை சின்னாபின்னப்படுத்தி மகிழ்ந்து கொண்டிருக்கிறான். அதன் சிறப்பு அம்சம் என்னவென்றால், அவர் பெயரால் இயங்குகின்ற ஸ்தாபனங்களையும், நபர்களையும் கொண்டே இந்தக் கைங்கரியத்தை இலாகவமாகச் செய்து விடுகிறான்.

அநீதத்தின் கூலிக்கு ஆசைப்பட்டு மோசம் போன இந்த நபர்கள் அப்போஸ்தலருடைய உபதேசங்களைத் திரித்தும், சிதைத்தும், நீட்டியும், குறுக்கியும் மக்களுக்கு விநியோகித்து குழப்பமுண்டாக்குகிறார்கள். அவைகளில் சிலவற்றை உங்கள் முன்வைக்கிறோம், **நீங்களே தீர்ப்பு கூறுங்கள்.**

அற்புத அடையாளங்கள் நடைபெற்றன என்று கூறும் அதே வேதாகமம், அது ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் முடிந்து போயிற்று என்றும் கூறுகிறது, அற்புத அடையாளங்கள் நடைபெற்றன என்று ஒருவர் விசுவாசிப்பாரானால், அது முடிந்து போயிற்று என்று கூறுவதையும் விசுவாசிக்க வேண்டும் அல்லவா?

தேவன் தம் நோக்கத்தை நிறைவேற்றவும், தேவைப்படும் போதும் அற்புதங்கள் செய்கிறார். நோக்கமும் தேவையும் முடிந்த பின்னர் இயற்கைச்சட்டத்துக்கு ஒப்புக்கொடுத்து விடுகிறார்.

1. தேவன் முதல் மனிதனுகிய ஆதாமை மட்டுமே அற்புதமாகப் படைத்தார். ஆனுல் அதற்கு அடுத்து வந்த மனிதர் அனைவருமே இயற்கை விதிகளுக்குட்பட்டே பிறந்து வளர்ந்தனர். உங்களையே எடுத்துக்கொள்ளுங்களேன்! உங்கள் சரீரம் அற்புதமாகப் படைக்கப் பட்டதா? இல்லை தானே! அதேபோல்தான் தேவன் ஒரு காரியத்தின் ஆரம்பத்தில் செய்த அற்புதத்தைத் தொடர்ந்து செய்து கொண்டிரா மல் இயற்கை விதிகளுக்கு ஒப்புக்கொடுத்து விடுகிறுர்.

2. பரிசுத்த வேதகாமம் அற்புதமாய் எழுதப்பட்டது. பரிசுத்த ஆவியானவர் துணை கொண்டு பரிசுத்த மனிதர்கள் வேதாகமத்தை அற்புதமாய் எழுதினுர்கள் 2 பேது 1:21. தாங்கள் ஒரு போதும் கற்றறியாத மொழிகளில் பிரசங்கித்தார்கள்; தீர்க்கதரிசனம் உரைத் தார்கள். (அப் 2:4) ஆனுல் பரிசுத்த வேதாகமம் முழுமையாக எழுதப்பட்ட பிறகு அற்புதமான முறைகள் நிறுத்தப்பட்டு விட்டன. ஏனெனில் தேவன் மனிதர்களுக்கு அளிக்க வேண்டிய அருட்செய்தி கள் அனைத்தையும் பரிசுத்த வேதாகமத்தில் பொறிக்கப்பட்ட பிறகு அற்புதமான முறைகள் தேவைப்படவில்லை. வெளி 22:18-19; யாக் 1:25. இப்பொழுது நம்மைப்போன்ற சாதாரண மனிதர்கள் முழுமை யாய் எழுதி முடிக்கப்பட்ட வேதாகமத்திலிருந்து தேவனுடைய அருட் செய்திகளை மக்களுக்குப் போதித்து வருகின்றனர்.

ஆனுல் ஒரு சிலர் தேவன் தங்களுக்கு புதிய புதிய வெளிப் பாடுகளை கொடுக்கிறுர். என்று தங்கள் அபிப்பிராயங்களுக்கு தேவ வாக்கு என்னும் சாயத்தைப் பூசி பாமர மக்களை ஏமாற்றுகின்றனர். ஒரு நாள் ஒரு நரிக்குறவர் இனத்தைச் சேர்ந்த ஒரு நண்பர் நரிக் கொம்பு வியாபாரம் செய்து கொண்டு இருந்தார். நரிக்குக் கொம்பு இருக்கிறதா என்பது முதல் கேள்வி, இரண்டாவது இத்தனை கொம்பு கள் எப்படிக் கிடைத்தன என்று ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்த வேளையில், அனுபவப்பட்ட(?) ஒருவர் நரிப்பல்லுக்குப் பசை போட்டு சில முடிகளைச் சுற்றிலும் ஒட்டி ஏமாற்றுகிறுன் என்று உண்மையை உடைத்தார். அந்த ஆள் அவரை முறைத்துப்பார்த்து விட்டு நைசாக நழுவி விட்டான். இந்தப் புதிய வெளிப்பாட்டுக் காரர்களைப் பார்த் தால் அவனுடைய ஞாபகம்தான் வருகிறது. இவைகளையெல்லாம் தெரிந்துதான் தேவன் கூட்டாதே, குறைக்காதே என்றும் (வெளி 22:18,19) வானத்திலிருந்து வந்த தூதனுயினும் சரி. அவன் சபிக்கப்பட்டவன் என்று ஒன்றுக்கு இரண்டுமுறை சொல்லுகிறுரோ? (கலா 1:6-9)

3. வனுந்தர யாத்திரையின் போது நாற்பது ஆண்டு காலமாக இஸ்ரவேல் மக்கள் மன்னுவை ஆகாரமாகப் புசித்து வந்தார்கள் யாத் 16:35. ஆனுல் அவர்கள் கானுன் தேசத்துக்கு வந்து விவசாயம்

செய்து முதல் பலனைப் புசிக்கத் துவங்கிய மறுநாளிலே மன்னா பெய்வது நின்று விட்டது (யோசுவா 5:12) அவர்கள் இயற்கை நியதிக்குட்பட்டு உழைத்து விளைவித்து உண்டனர்.

4. பரிசுத்த ஆவியானவர் இயேசுவின் மேல் வந்த பொழுது புறு வடிவில் வந்தார். யோவான் 1:32–34 அவர் தான் தேவகுமாரன் என்றும் அவரே பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைக் கொடுக்கிறவர் என்றும் யோவான் ஸ்நானகனுக்குத் தெரிவிக்கவும் அது அவ்வாறு நடந்தது என்று வேதாகமம் கூறுகிறது 1 : 33, 34 அந்த நோக்கம் நிறைவேறின பின்பு வேறு எவருக்கும், ஒரு போதும் அப்படிப்பட்ட முறையில் பரிசுத்த ஆவி அருளப்படவில்லை.

**பரிசுத்த ஆவியானவர் அப்போஸ்தலர்கள் மீது இறங்கினதைப் போல என்மீதும்இறங்கவேண்டும் என்று எதிர்ப்பார்ப்பது விவேகமாகாது.**

அப்போஸ்தலருக்கு மட்டுமே கொடுக்கப்பட்ட சில வாக்குத் தத்தங்கள் எனக்கும் மற்றும் இந் நாட்களில் வாழும் அனைத்து கிறிஸ் தவர்களுக்கும் பொருந்தும் என்று வாதிடுவது அறியாமை. அவர்கள் வேதாகமத்தில் உள்ள அனைத்து உண்மைகளை எழுதுவதற்கான கட்டளை பெற்றிருந்தார்கள் (யோவான் 16:13.) அவர்களுக்குக் கட்டுவதற்கான அதிகாரமும் கட்டவிழ்ப்பதற்கான அதிகாரமும் கூட உண்டு. (மத் 18:18.) தேவன் சபையில் முதலாவதாக அப்போஸ்தலர்களை ஏற்படுத்தினார் (1 கொரி 12:28.) அப்போஸ்தலர்கள் சபையின் அஸ்திபாரங்கள் (எபே 2:20.) அப்படி நாம் எல்லோருமே அஸ்திபாரங் களா? இல்லையே. அப்படியிருக்க அப்போஸ்தலருக்குச் சிறப்பாகக் கொடுக்கப்பட்ட சில அதிகாரங்கள் உரிமைகள் எனக்கும் ஏன் இருக்கக் கூடாது என்று வாதிடுவது பொருந்துமா? அக்கினி மயமான நாவுகள் போன்ற நாவுகள் அப்போஸ்தலர்கள் ஒவ்வொருவர் மீதும் அமர்ந்தனவே (அப் 2:3.) அப்படி உனக்கும் எனக்கும் ஏற்பட்டதா? அதை தேவன் அவர்களுக்கு ஒரு நோக்கத்துக்காகக் கொடுத்தார் (மாற்கு 16:20.) நாம் அதை இச்சித்து, தேவனுக்கு எரிச்சல் உண்டாக்கக்கூடாது.

அப்படியானால் இன்றும் அற்புத அடையாளங்கள் நடக்கிறது என்று கூறுகிறார்களே அது எப்படி?

**சாத்தான் பொய்யான அற்புதங்களைச் செய்து ஏமாற்றுவான்.**

2 தெசா 2:9-12-ல் சாத்தான் வல்லமையோடும், பொய்யான அற்புதங்களோடும் வருவான் என்று எச்சரிக்கிறது. சத்தியத்தின் மேலுள்ள அன்பை அவர்கள் அங்கீகரியாமற் போனபடியால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில்பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்குள் அனுப்புவார் என்று கூறுகிறது மேலும் வெளி 13:13-ல் 'அன்றியும் அது மனுஷருக்கு

முன்பாக வானத்திலிருந்து பூமியின்மேல் அக்கினியை இறங்கப்பண்ணத் தக்கதாக பெரிய அற்புதங்களை நடப்பிப்பார்கள் என்று கூறுகிறது. மத் 7:22-ல் கூட இக் கள்ளத் தீர்க்கதரிசிகள் 'உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புத அடையாளங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள் என்றும் அவர்களை ஆண்டவர் 'அக்கிரமச் செய்கைக்காரரே' என்று பட்டம் சூட்டி விரட்டித் துரத்திவிடுவார் என்றும் வாசிக்கிறோம். 2கொரி 11:13-15 வசனப்பகுதியில்' அப்படிப்பட்டவர்களை கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள்; கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக்கொண்டவர்களாயிருக்கிறார்கள். அது ஆச்சரிய மல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்வானே, ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டால் அது ஆச்சரிய மல்லவே. அவர்கள் முடிவு அவர்களுடைய கிரியைகளுக்குத் தக்கதாக இருக்கும்' என்கிறது.

அப்படியானால் அசலையையும் போலியையும் எவ்வாறு அடையாளம் கண்டுகொள்வது? சோதித்துப் பார்த்து தெரிந்து கொள்ளவேண்டும் என்று வேதாகமம் ஆலோசனை கூறுகிறது. 1 யோவான் 4:1-ல் 'பிரிய மானவர்களே, உலகத்தில் அநேக கள்ள தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்ப தனால் நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல் அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்' என்று கூறுகிற அறிவுரையின்படி அவர்களைச் சோதித்துப் பார்ப்பதே சிறந்தவழி. ஆறும்வசனத்தில் அப்போஸ்தலர்கள் தேவனுடையவர்கள் என்றும், தாங்கள் எழுதிவைத்துள்ளவைகள் தேவனுடைய வசனங்கள் என்றும், தேவனை அறிந்தவன் தங்களுக்குச் செவி கொடுக்கிறான் என்றும், இதனாலே சத்திய ஆவி இன்னதென்றும், வஞ்சக ஆவி இன்னதென்றும் அறிந்திருக்கிறோம் என்றும் கூறுகிறது.

**தற்காலத்தில் செய்யப்படும் அற்புத அடையாளங்கள் வேதாகம அற்புத அடையாளங்களைப் போல தெளிவும் திட்டமாகவும் இல்லை.**

அப் 2;6, 8-ல் பேசப்படுகிற அந்நிய மொழிகள் உண்மையாகவே ஒரு குறிப்பிட்ட மொழி என்று தெரிகிறது. அந்த பவுலும் உறுதி செய்கிறார் (1 கொரி 14:10) ஆனால் தற்காலத்தில் அந்நியபாஷை என்ற பெயரில் தத்துபித்து என்று உளறிக்கொண்டு, ஆவேசம் வந்தவர்கள் போல் உடம்பை அலட்டிக்கொண்டு, கூச்சல் போடுகின்றனர் 1 கொரி 14:19-ல் 'அந்நிய பாஷைகளைப் பேசுவதைப்பார்க்கிலும் மற்றவர்களை உணர்த்தும்படி என் கருத்தோடே ஐந்து வார்த்தைகளைப் பேசுவது சிறந்தது என்று பவுல் கூறுகிறார். ஆனால் தற்காலத்தில் அந்நிய பாஷை பேசுகிறோம் என்று சொல்லுபவர்கள் உளறலில்

(இதன் தொடர்ச்சி 21-ஆம் பக்கம் பார்க்க)

# ஆத்தும ஆதாயம் உங்கள் பிரதான நோக்கமாயிருக்கட்டும்

கர்த்தருடைய பிள்ளைகள் என்ற சிறப்பு நிலையை அடைந்துள்ள கிறிஸ்தவர்கள், தாங்கள் எவ்விதமாக வளர்ந்து கொண்டு வருகி றோம், என்பதை அடிக்கடி சோதித்துப் பார்த்துக்கொள்ள வேண்டியது அவசியம். நம்முடைய நோக்கங்களையும், செயல் திட்டங்களையும் அதனால் ஏற்படுகின்ற விளைவுகளையும், அதைச் சீர்படுத்துவதற்கான ஆலோசனைகளையும் பற்றி அவ்வப்போது சிந்தித்துப் பார்க்க வேண்டும். பிரபலமடைந்துள்ள பல்வேறு கம்பெனிகளை உற்றுக் கவனித்தால் அவர்கள் அவ்விதமாய்ச் செய்து தங்கள் வியாபாரத்தைப் பெருக்கி யிருக்கிறார்கள் என்ற உண்மை தெரியவரும்.

நாம் அப்படிச் சிந்திக்கவும், செயல்படவும் மறுத்தால், நான் கிறிஸ்தவன். என்னுடைய வாழ்க்கையில் முடிகிற அளவு உண்மை யாயிருக்கிறேன். பொய் சொல்லுவதில்லை; பிறரை ஏமாற்றுவதில்லை சண்டை சச்சரவுக்குப் போவதில்லை, ஒழுங்காக ஆராதனைக்குச் செல் லுகிறேன் என்று ஒரு வேளை திருப்திப்பட்டுக் கொள்ளலாம். ஆனால் ஒரு உண்மைக் கிறிஸ்தவனுடைய கடமை இத்தோடு முடிந்து விடுவ தில்லை. நாம் கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வளரவேண்டும். நம் முடைய நம்பிக்கையைக் குறித்து மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். நம்முடைய நண்பர்கள் நம்முடைய நற்பண்புகளால் ஈர்க் கப்படவேண்டும், நாம் கனிகொடுக்கிற கிறிஸ்தவர்களாக இருக்க வேண்டும். நம்முடைய வாழ்க்கையில் ஒரு திட்டம் இருக்கவேண்டும், ஓர் ஆண்டுக்குள் இப்படிச் செய்வேன். ஐந்து ஆண்டுகளில் இன்னின் னதை நான் செய்து முடிப்பேன் என்றெல்லாம் சிந்திக்கவேண்டும். என்று எதிர்பார்க்கப்படுகிறோம்.

அதே போல நீங்கள் சார்ந்துள்ள பிராந்திய சபைக்குக் கூட ஒரு திட்டமிருக்கவேண்டும். ஏதோ ஞாயிறு ஒரு நேரம் ஒரு ஆராதனை நடத்தினோமா, இந்த வாரத்துக்கெல்லாம் அதே போதும் என்று வந்தவர்களை வைத்து கூட்டத்தை முடித்து விடுகிறீர்களா? உங்களு டைய சபை ஒரு சிறந்த முன்னோடியையுடையதாக இருக்கிறதா? நீங்கள் ஆண் அங்கத்தினராக இருந்தால் முன்னோடிகளில் நீங்களும் ஒருவரா? நீங்கள் எல்லாரும் கூடி சபையைத் திட்டமிட்டு வழி நடத்திச்செல்லு கிறீர்களா? சபை விரிவாக்கம் பற்றி உங்களுக்கு ஒரு குறியீடு உண்டா? வாரத்தின் இடைப்பட்ட நாட்களில் வேத அறிவை அபிவிருத்தி செய்வதற்கு வேதாகம வகுப்புகள் நடத்தப்படுவது உண்டா? அவை கள் ஒரு ஒழுங்கைப்பின் பற்றி நடக்கிறதா? அல்லது கிளி ஜோசிய பாணியில் வழியர் வேதாகமத்தைத் திறந்து, கண்ணுக்கு அகப்பட்ட

வசனத்தை வாசித்து தமக்குத் தெரிந்ததைச்சொல்லி விட்டு முடித்து விடுகிறாரா? எல்லா உறுப்பினர்களையும் அவரவருடைய தகுதிக்கேற்ப வளர்ச்சியடையச் செய்யும் நோக்கத்துடன் அவர்கள் ஒவ்வொருவரையும் பயன்படுத்துகிறீர்களா? வியாதியஸ்தர்களைச் சந்தித்து ஆறுதல் கூறி ஜெபிப்பதுண்டா? பின் வாங்கிப்போன உறுப்பினர்களை உற்சாகப் படுத்தி மீண்டும் அவர்கள் சபையோடு இணைந்து வளரச்செய்யும் முயற்சி உண்டா? அவ்வப்போது சிறப்பு நற்செய்திக் கூட்டங்கள் நடத்தி பொதுமக்களுக்கு இயேசுவின் நற்செய்தியை அறிவிப்பது உண்டா? அருகிலுள்ள பட்டணங்கள், கிராமங்களில் புதிய ஊழியம் தொடங்கும் முயற்சி உண்டா?

சகோதரிமார்களே! பெண்கள் மத்தியில் எப்படிப்பட்ட ஊழியம் செய்கிறீர்கள்? சபைக்கு ஒழுங்காக வராத பெண் அங்கத்தினர்களைச் சந்திப்பதும், வியாதியஸ்தர்களைச் சந்தித்து ஜெபிப்பதும் உண்டா? ஞாயிறு பள்ளி நடத்த உதவி செய்வதுண்டா? சபையின் வேலைகளில், கர்த்தருடைய பந்தி ஆயத்தம் செய்வதில், சபை சுத்திகரிப்பது, இருக்கைகளை ஒழுங்குபடுத்துவது போன்ற பணிகளில் உங்கள் பங்கு என்ன? இப்படிப்பட்ட கேள்விகளுக்கு நேர்மையான பதில் சொல்லி நீங்கள் சபையில் எங்கு நிற்கிறீர்கள் என்று உய்த்து உணருங்கள்.

சகோதரனே! நீ சபைக் காரியங்கள் எதிலும் கலந்து கொள்ளாமல் மற்றவர்கள் என்ன செய்யவேண்டும் என்று பட்டியல் போடுகிற பழக்கத்தை விட்டு விடு. ஆர்வமுள்ள ஒரு சில சகோதரர்கள் தங்களால் இயன்றதைச் செய்து வைத்திருந்தால் அதில் குற்றம் கண்டு பிடித்துக்கொண்டு அலையாதே. நீ முதலில் நன்முறையில் செயல்பட்டு மற்றவர்களுக்கு வழி காட்டு. அதுவே ஆரோக்கியமான அணுகுமுறை.

சகோதரனே சகோதரியே! நீ வேதாகம வகுப்புகளிலும், ஆராதனைகளிலும் இதர சபை நிகழ்ச்சிகளிலும், ஒழுங்காக ஆர்வத்தோடு கலந்து கொள்ளுகிறாயா? எப்பொழுதும் பிந்தி வருவது உன்னுடைய பழக்கமா? ஒரு சிறு சாக்குக் கிடைத்தால் கூட போதும். அதை வைத்துக்கொண்டு ஆராதனைக்கு வராமல் நின்று போகிறாயா? உன்னுடைய கிறிஸ்தவ வாழ்க்கை உன் குடும்பத்துக்கும் குழந்தைகளுக்கும் முன் மாதிரியாக இருக்கிறதா? உன்னுடைய தவறான கிறிஸ்தவ வாழ்க்கை உன் குடும்பத்தையே கடவுளிடமிருந்து பிரித்து விடுகிற அபாயத்தை நீ உணருகிறாயா?

உன் அயலகத்தாரையாவது, உன் நண்பர்களையாவது ஆராதனைக்கு அழைத்துக்கொண்டு வருகிறாயா? உன் கிறிஸ்தவ சகோதரனையாவது குடும்பத்தையாவது அல்லது கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளக் கூடும் என்று தெரிகிற வேறே யாரையாவது அழைத்து அவர்களை உபசரித்து கிறிஸ்தவ அன்பை வெளிப்படுத்துகிறாயா? அவ்விதமாக கிறிஸ்தவ அன்பை வெளிக்காட்டி சத்தியத்தை அறிவிப்பது ஒரு சிறந்த முறை; முயன்று பாருங்கள்.

நீங்கள் சபைக்காரியங்களில் அக்கரையுள்ளவரா? அல்லது எல்லா வேலைகளும் முடிந்த பிறகு விருந்தினர் போல் வருகிற நபரா? கர்த்தருடைய காரியங்களில் உனக்கு உள்ள ஈடுபாட்டை வைத்துத் தான் உன் தொழிலும், உத்தியோகமும், படிப்பும், குடும்ப அமைப்பும் இருக்கும் என்கிற உண்மை உனக்குத் தெரியுமா? சபை என்பது ஒரு இயந்திரம் போன்றது. அதில் உள்ள எல்லா உறுப்புகளும் சரியாக இயங்கினால் தான் இயந்திரம் ஓடும். அதில் ஒரு சிறு உறுப்புப் பழுதடைந்து விட்டால் கூட மற்ற பாகங்கள் இயங்கமுடியாமற்போய் விடும். 1கொரி 12-ம் அதிகாரத்தில் அப்போஸ்தலன் பவுல் ஆவிக்குரிய சரீரமாகிய சபையை நம்முடைய ஜென்ம சரீரத்தோடு ஒப்பிடுகிறார். சரீரத்தின் ஒரு உறுப்பு செயலற்றுப்போனால் முழுச்சரீரமும் அதனால் பாதிக்கப்படுகிறதை நாம் அறிவோம். அப்படியே ஆவிக்குரிய சரீரமாகிய சபையும் உறுப்பினர்கள் இணக்கமாகச் செயல்படாமலும், மெத்தனமாகவும், பகையுணர்வோடும், ஐக்கியமில்லாமலும் செயல்பட்டால் பாதிப்படையும்.

நாம் சபையின் தனித்தனியான உறுப்புகளாயிருந்தாலும் நாம் இணைந்து பாடுபடுவோமானால் சக்தி மிகுந்த இயந்திரத்தைப்போல் இருப்போம். உலகத்துக்கு ஒளியாகவும். பூமிக்கு உப்பாகவும் வெற்றி வாகை சூடும் பலமான சேனையைப் போலவும் இருப்போம். நாம் நம்மைச்சுற்றியுள்ள மக்களுக்குப் பயன்தரக்கூடிய அளவில் முன் மாதிரியாக இருக்க முடியும். நாம் சபையாகப் பெரிய காரியங்களைச் செய்து காட்டமுடியும். நம் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்பின் அளவை நாம் சரியாகப் புரிந்து கொண்டால் நாம் செய்திருப்பது எவ்வளவு சொற்பம் என்பதை உணர முடியும்.

அப்போஸ்தலர்களுடைய நடபடிகளில் சொல்லப்பட்டுள்ள சபை வரலாற்று நிகழ்ச்சியைக் கவனித்தால் அவர்கள் எவ்வாறு நாளுக்கு நாள் பெருகி வளர்ந்தன என்பதை அறிய முடியும். அது எப்படி சாத்தியமாயிற்று? நாள் தோறும் இடைவிடாமல் சத்தியம் மக்களுக்கு அறிவிக்கப்பட்டு வந்ததினால் தான். அவர்களுக்கு ஏராளமான துன்பங்களும் தடைகளும் ஏற்பட்டன. ஆனால் அவைகளால் அவர்கள் சோர்ந்து போகவில்லை. மாறாக அவைகளே அவர்களுக்குச் சாதகமாயின. தாங்கள் சிதறடிக்கப்பட்டுச் சென்ற விடங்களில் எல்லாம் இயேசுவின் நற்செய்தியை மகிழ்ச்சியோடே அறிவித்தனர். அப் 8:4.

சமீபத்தில் சிங்கப்பூரில் உள்ள ஒரு கிறிஸ்தவ சகோதரனிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில் ஒரு குறிப்பிட்ட சபையார் தங்கள் ஆராதனைக்கூடத்தை விரிவுபடுத்தி அதில் வேதாகம வகுப்புகளை நடத்த உத்தேசித்திருப்பதாகவும், புறவினத்தவருக்கு நற்செய்தியை அறிவிக்கும் பணியை தீவிரப்படுத்தத் திட்டமிட்டிருப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார். தங்களுக்கு அருகாமையில் இருந்த சபைக்கு ஒரு

கட்டடம் எழுப்பப்பட்டதால் கொஞ்சம் கடனாளிகளாகிவிட்ட அவர்களுக்குக் கொஞ்சம் நிதிஉதவி செய்யப்போவதாகக் கூடக் குறிப்பிட்டிருக்கிறார். அது மட்டும் அல்லாமல் அந்த சபை வெளியூர்களிலும் வெளிநாடுகளிலும் ஊழியம் செய்யும் சில ஊழியர்களுக்கு நிதி உதவி செய்வதாகவும் கூடக் குறிப்பிட்டிருந்தார். மேலும் நகரின் அருகாமையிலுள்ள கிராமத்துக்குச் சென்று அங்கே நற்செய்தியை அறிவித்து, பின்னர் ஒரு சபையை நிறுவ முயல்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சபை இப்பொழுது மட்டும் அல்ல; கடந்த சில ஆண்டுகளாகவே அப்படிச் செய்து வருகிறதை நான் அறிவேன். இன்னும் சில சபைகள் இருக்கின்றன. நாங்கள் முன்னேறுவதும் இல்லை. பின்னடைவதும் இல்லை. நாங்கள் வளருவதுமில்லை; தேய்வதும் இல்லை, நாங்கள் புதிய அங்கத்தினர்களைச் சேர்த்துவதும் இல்லை. இருக்கிற அங்கத்தினர்களை விரட்டுவதுமில்லை. என்ற நிலையில் அனலும் இன்றிக் குளிருமின்றி இருக்கின்றன. இவ்விதமான தேக்க நிலை ஆரோக்கியத்துக்கு அறிகுறி அல்ல.

இந்த அவல நிலை மாற நாம் என்ன செய்யவேண்டும்? எங்கிருந்து தொடங்கவேண்டும்? முதலில் நம்மில், நம்முடைய குடும்பத்தில் ஆரம்பிக்கவேண்டும், பின்னர் நாம் சார்ந்துள்ள சபை வளரப் பாடுபடவேண்டும். ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய முயல வேண்டும். நம்முடைய நாட்டில் கோடிக்கணக்கான மக்கள் அழிவுப் பாதையில் வேகமாய் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை அணுகி, இயேசுவின் அன்பின் நற்செய்தியைக் கூறவேண்டும். நாம் கனி கொடுக்கிற கிறிஸ்தவர்களாக மாற வேண்டும். விசுவாசத்தைக் காத்துக்கொள்ள வேண்டும். உங்களையும், உங்கள் உடமைகளையும் உற்சாகமாக கர்த்தருக்குக் கொடுக்கவேண்டும். அப்பொழுது ஏற்படும் பலன்கள் நமக்கே பிரமிப்பை உண்டாக்கும்.

இப்பொழுது சொல்லுங்கள்! மேற் சொன்ன காரியங்களில் நம்முடைய ஈடுபாடு எத்தகையது? இதெல்லாம் செய்யாமல் நான் நல்ல கிறிஸ்தவன, நான் சார்ந்திருக்கும் சபை சிறந்த சபை என்று நாம் பெருமைப்பட்டுச் சொல்லிக் கொள்ளலாம். ஆனால் கர்த்தர் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார். நீங்கள் உண்மையாகவே கர்த்தருடைய பணியில் கிடைக்கும் ஆறுதலையும். சமாதானத்தையும் மகிழ்ச்சியையும் பெறவேண்டுமானால் உங்களை நீங்களே அவருக்கு அர்ப்பணித்து, அவருடைய சேவையில் முழுமனதுடன் ஈடுபடுங்கள். நற்செய்தியைப் பிரகடனப்படுத்துங்கள் ஆத்துமாக்களை ஆதாயம் செய்யுங்கள், அவருடைய இராஜ்ஜியத்தின் எல்லையை விரிவாக்குங்கள். அதுவே கர்த்தர் விரும்பும் நற்செயல்கள்.

J. C. சோட்.

# இறுதித் தீர்ப்பில் நீங்கள் எந்தப் பக்கம்?

மத்தேயு 25ஆம் அதிகாரம் 31 முதல் 46 வரை உள்ள வசனங்களை கவனமாய் படித்துப்பாருங்கள். இயேசு ஒலிவ மலை மீது அமர்ந்திருந்தார். அவருடைய சீடர்கள் அவரை அணுகி, உலகத்தின் முடிவு பற்றியும் கிறிஸ்துவின் இரண்டாவது வருகை பற்றியும் அவரிடம் கேட்டனர். கிறிஸ்து அவர்களுடைய கேள்விக்கான பதிலை விளக்கிக் கூறிவிட்டு (மத்தேயு 24, 25) கடைசியாக நியாயத்தீர்ப்பு பற்றிய காட்சியுடன் முடிக்கிறார். (மத்: 25–31-44) நீதிமான்கள் வலது பக்கத்திலும் துன்மார்க்கர்கள் இடம் புறமும் நிறுத்தப்படுவார்கள். அன்றைய நாளிலே நடக்கும் தீர்ப்பு சிலரை வியப்படையச் செய்யும்!

அந்த தீர்ப்பின் நாள் வருகையில், வியப்படைந்து நிற்போரில் நாமும் ஒருவராக இருப்போமோ? I கொரி 10:12

"வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள்" (மத். 25:34)என்ற வரவேற்பு நமக்குக் கிடைக்குமா? அல்லது, "சபிக்கப்பட்டவர்களே, என்னை விட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்" என்ற திடுக்கிடும் தீர்ப்பை அடைவோமா? (மத். 25:41),

இப்பகுதியில் நீதிமான்களுக்கு குறிப்பிடப்பட்டிருக்கும் காரியங்கள் அனைத்துமே இரக்க சிந்தை, நற்கிரியைகள் சம்பந்தப்பட்டவையாகும், ஆகவே இவற்றைக் கடைபிடித்து நடப்பது கிறிஸ்தவர்களின் தலையாயக் கடமை. பசித்தோருக்கு உணவு, தாகமுள்ளோருக்கு தண்ணீர், அந்நியருக்கு உதவி, தேவையுள்ளவர்க்கு ஆடை, நோயுற்றோர், சிறைப்பட்டோருக்கு ஆறுதல் இத்தியாதி. இக்கடமைகளை பலர் புறக்கணித்து வருகின்றோம். யாக். 1:27.

பாவத்தைப் பற்றி நம்மில் பலருக்குத் தெளிவில்லை, கொலை, கொள்ளை, திருட்டு, விபச்சாரம், பொய் ஆகியவைகள் தான் பாவம் என்று நினைத்துக்கொண்டிருக்கிறோம். அப்படியல்ல; நற்செயல்களைச் செய்யத் தவறுவதும் கூட பாவம் என்று வேதாகமம் கூறுகிறது. (யாக் 4:17; மத் 25 ; 1 யோ. 5 : 17; எபி. 2:3; 10 : 25) தேவன் வேண்டாம் என்று விலக்கினதைச் செய்வதும் பாவமே (1 யோ. 3:4; கலா 5:19–21) இவைகளைப் புரிந்து கொண்டு, கிறிஸ்தவர்கள் செயல்படத் தவறினால் பாவம் செய்கிறோம் என்றே பொருள்.

இக்கடமைகளை நிறைவேற்ற அடிப்படை நற்பண்பு, அன்பு செலுத்துவதாகும். கட்டாயத்தினிமித்தமாகவும், மற்றவர்கள் பாராட்டவேண்டும் என்பதற்காகவும் இவற்றை நாம் செய்யக் கூடாது.

தேவன் பேரிலும் மனிதர் பேரிலுமுள்ள அன்பால் உந்தப்பட்டே இந்த நற்கிரியைகளைச் செய்யவேண்டும். நம்மைப்போலவே நம் அயலானையும் நேசிக்கவேண்டும் என்பது கட்டளை. நல்ல சமாரியனுடைய செயல் இதை நமக்குப் படம் பிடித்துக்காட்டுகிறது. (லூக்கா 10:25-37) "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இதயத்தோடும் உன் முழு மனதோடும் அன்புகூருவாயாக" என்பது முதலாம் பிரதான கற்பனையாகும். அதை அடுத்து இரண்டாவது கற்பனை "உன்னிடத்தில் நீ அன்பு கூருவதுபோலப் பிறரிடத்திலும் அன்பு கூருவாயாக" என்பதாகும். (மத். 22:34–40). எவ்வித பிரதிபலனையும் எதிர்பாராது சக மனிதர்களிடம் உண்மையாக அன்பு செலுத்தவேண்டும். இவ்வுலகில் நாம் மட்டுமே தனித்து வாழவில்லை. எனவே "மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" (லூக். 6:31; மத். 7:12) என்ற தங்கச்சட்டத்தை நாம் ஏற்று நடக்க வேண்டும்.

சில நேரங்களில் சில மனிதர்களுடன் நாம் இணைந்து போவது எளிதாக இருக்கக்கூடும்; இன்னும் சில வேளைகளில் அது கடினமாக இருக்கலாம். ஒரு உறவினர் அல்லது நண்பரோடு ஒத்துப்போவது நமக்கு எளிதாகத்தோன்றும். நமது நண்பர்களுக்கு உணவளிக்கிறோம். அவர்களும் பதிலுக்கு நமக்குச் செய்கிறார்கள். நமது உறவினர்கள் ஒன்றாகச்சேரும் திருமணம் அல்லது பண்டிகை நாட்களில் பலத்த விருந்து செய்து மகிழ்கிறோம். வறுமையில் வாடும் ஏழைகளுக்கு நாம் உண்டு, மீதியானவைகளை அரை மனதுடன் கொடுக்கிறோம். (லூக். 16 : 19-31).

ஒரு ஆப்த நண்பரோ அல்லது உறவினரோ வியாதியாயிருப்பின் அவரைச்சந்தித்து ஆறுதல் கூறி தேவைப்பட்ட உதவிகளைச் செய்கிறோம். அன்னியர்கள் காரியங்கள் என்று வரும்போது "போதிய நேரம் கிடைப்பதில்லை;" "அது ஒட்டுவாரொட்டி நோய், நம்மையும் தொற்றிக்கொள்ளும்" என்றெல்லாம் சொல்லிக்கொண்டு ஒதுங்கிக் கொள்கிறோம்.

"வறுமையில் வாடுவோருக்கு உதவியா? நாமே வறுமைக் கோட்டுக்கும் கீழ்த்தான் இருக்கிறோம். நமக்கு யார் உதவுகிறார்கள்? நமது பிரச்னையே தலைக்கு மேல் இருக்கின்றன. ஊருக்குஉதவ முடியுமா? அது அவன் தலைவிதி" என்று வேதாந்தம் பேசுகிறோம்.

சிறைவாசிகளைச் சந்திப்பது? ஐயோ, வேறு வினையே வேண்டாம் உனக்கும் அவனுக்கும் ஏதாவது தொடர்பு இருக்கும்; இல்லாவிட்டால் உனக்கு ஏன் இவ்வளவு அக்கரை? என்று போலீஸ் பிடித்துக்கொள்ளும் நமக்கு ஏன் வீண் வம்பு? என்று செய்கிறவனையும் கெடுத்து விடுகிறோம்.

தேவனுடைய வசனமோ "சகல வித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயிருக்க வேண்டும்" என்றுரைக்கிறது, (II கொரி9:8)

எபேசி 2:10; II தெசலோ. 2:17; I தீமோ. 6:18; தீத்து 3:8) நாம் தரும் கனிகளைக்கொண்டே நாம் அறியப்படுகிறோம்; நியாயந் தீர்க்கப்படுகிறோம். (மத். 7:16; லூக். 6 : 14).

பசி தாகத்தால் வாடுவோரைப்பற்றிய உண்மையான அக்கரை கிறிஸ்தவர்களுக்கு இருக்கவேண்டும். வறுமையின் பிடியிலுள்ளவருக்கு உதவினால் தேவனுடைய ஆசீர்வாதத்தில் நமக்கு பங்குண்டு, அந்நியர், வியாதியஸ்தர், சிறைவாசிகள் பற்றியும் அக்கரை நமக்கு வேண்டும். (எபிரேயர் 13 : 1 - 3 பார்க்க) நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும் நன்மை செய்வோம். (கலாத்தியர் 6:10).

இயேசு கிறிஸ்து அளித்த இரட்சிப்பின் மகத்தான திட்டம் (மத்தேவு 28:18-20; மாற்க் 16:15-16) எல்லா நாடுகளிலுமுள்ள சகல ஜாதிகளுக்கும் கொடுக்கப்பட்டதாகும். ஒவ்வொரு ஆன்மாவும் அவருக்கு முக்கியமானவர்களே. இச்செய்தியை உலகம் முழுமைக்கும் எடுத்துச்செல்லும் தூதர்களாக கிறிஸ்தவர்கள் செயல்படவேண்டும். அது மட்டும் அல்ல; எல்லா ஆசீர்வாதங்களும் பொங்கி வழியும் அவருடைய நற்செய்தியை நாம் கேட்டு அதன்படி நடக்கவும் வேண்டும் (யாக் 1:22).

பசியுள்ளோரையும் வறுமையில் வாடுபவர்களையும் நாம் சந்திக்க மறுத்தால் இந்நற்செய்தியை அவர்களுக்கு எவ்வாறு கொண்டு போகமுடியும்? அந்நியரை ஒதுக்கினால் எவ்வாறு அவர்களை அணுக முடியும்? ஒரு சிறைவாசியை சந்தித்து உபதேசிக்காத பட்சத்தில் தேவனுடைய வழி நடத்துதலின் தேவையை அவனுக்கு எவ்வாறு உணர்த்த முடியும்? விரும்பி வருவோரை மட்டுமே தேர்ந்தெடுத்து அவர்களுக்கு உதவி செய்து போதிப்பதால் இயேசுவின் மாபெரும் இரட்சிப்பின் திட்டத்தை நாம் நிறைவேற்ற முடியுமா? அவருடைய கற்பனைகளை நாம் அலட்சியப்படுத்தினால் இறுதி தீர்ப்பின் நாளிலே வலது பக்கத்திலே வீற்றிருக்கும் பாக்கியத்தை எதிர்பார்க்க முடியுமா? சிந்தித்துச் செயல்படுவோம்!

மூலம்: வீலர் பவுண்ட்ஸ் — தமிழில்: எஸ். எஸ். ராஜன்.

---

தூக்கத்தை விரும்பாதே, விரும்பினால் தரித்திரனாவாய்
விழித்திரு, அப்பொழுது ஆகாரத்தினால் திருப்தியாவாய்
திராட்சைரசம் பரியாசஞ்செய்யும், மதுபானம் அமளிபண்ணும்:
அதினால் மயங்குகிற ஒருவனும் ஞானவான் அல்ல.

சோம்பேறி குளிருகிறது என்று உழ மாட்டான்;
அறுவடையின் போது பிச்சை கேட்டாலும் ஒன்றும் கிடைக்காது
பொன்னும் மிகுதியான முத்துக்களும் உண்டு;
அறிவுள்ள உதடுகளோ விலையுயர்ந்த இரத்தினம்.

---

# தெரிந்து கொள்ளுங்கள்

## பாலஸ்தீனு நாட்டின் வரலாறு

நமது கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்து மனிதனு கப் பிறந்து, தவழ்ந்து, வளர்ந்து நன்மை செய்பவராகச் சுற்றித் திரிந்த புண்ணிய பூமியாகிய கானுன் அல்லது பாலஸ்தீனு நாட்டைப் பற்றிய விவரங்கள் கிறிஸ்தவ மக்களாகிய நமக்குத் தெரிந்திருப்பது அவசியம். ஏனெனில், அந்த நாட்டின் புவியியல் வரலாறு, நாகரீகம், பண்பாடு ஆகியவைகளை யொட்டித் தான் நமது பரிசுத்த வேதாகமம் எழுதப் பட்டிருக்கிறது. ஆகவே பரிசுத்த வேதாகத்தை சீராகவும், சுலபமா கவும் புரிந்து கொள்வதற்கு பாலஸ்தீனு நாட்டின் இயற்கை அமைப்பு கள், வரலாற்றுச் சிறப்புகள், நாகரீகம் ஆகியவற்றை நாம் தெரிந்து வைத்திருப்பது உதவியாக இருக்கும்.

பாலஸ்தீனு என்னும் சொல் ''பிலிஸ்தியா'' என்ற சொல்லின் சிதைவு ஆகும். இந்நாட்டின் இயற்பெயர் கானுன் என்று வேதாக மம் கூறுகிறது. ஆதி 12 : 5, எபிரெய மொழியில் பெலெஷெத் (Pelesheth) என்ற பதம் உபயோகிக்கப்பட்டிருக்கிறது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்த நாட்களில் இந்நாட்டின் எல்லா பகுதிகளிலும் நன்மை செய்பவராகச் சுற்றித்திரிந்தமையால் இதைப் 'புண்ணிய பூமி' (Holy Land) என்றும் அழைப்பர்.

இதன் பூர்வீகக் குடிகள் கானுனியர், எமோரியர், ஏத்தியர் ஓரியர். அமலேக்கியர் என்பவர்கள் ஆவர். இவர்கள் நோவாவின் குமாரன் ''சேம்'' கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் என்றும், அவர்கள் வடகிழக்கு அரேபியாவிலிருந்து வந்து சுமார் கி.மு. 3000ஆண்டுவாக்கில் இங்கு குடியேறிருக்கலாம் என்றும் கருத இட முண்டு.

பாலஸ்தீனு தேசத்தில் மலைநாடுகள் மிகுதி, தட்பவெப்ப நிலை மிதமானது. சவக்கடல் பள்ளத்தாக்குப் பகுதிகள் சற்று உஷ்ணப் பிரதேசம் ஆகும். அக்டோபர் முதல் மார்ச்சு மாதம் வரை மழை காலம், மற்ற மாதங்களில் மழை பெய்வது அபூர்வம் இங்கு கோதுமை, பயிறு கடலை. பருத்தி விளையும். திராட்சை, அத்திமரங்கள் ஒலிவ மரங்கள், ஆகிய கனிதரும் மரங்கள் மிகுதி. நரி, ஓநாய், பலவிதமான மான்கள், பன்றி, முயல், காட்டுப்பூனை, ஒட்டகம், எருமை, ஆடு, மாடு, கழுதை, நாய் ஆகிய மிருகங்களும், கழுகு, கௌதாரி, புரு, கொக்கு, கோழி போன்ற பறவைகளும் காணப்படும் முற்காலத்தில் சிங்கங்கள் கூட இருந்தனவாம்; இப்பொழுது இல்லை. ஊரும் பிராணி களில் பாம்புகளும், பல்லிகளும், குறிப்பிடத்தக்கவை,

ஆபிரகாமின் சந்ததியார்கள் இந்நாட்டைக் கைப்பற்றிய பின்னர் இதற்கு 'இஸ்ரவேலர் நாடு' என்று பெயர் வழங்கலாயிற்று. 1 சாமு 13:19. இஸ்ரவேலின் முற்பிதாக்களாகிய ஆபிரகாம் முதலிய

வர்கள் நாடோடி வாழ்க்கை வாழ்ந்து வந்தனர். அவர்கள் ஆசியா விலிருந்து சீரியா நாடுகளில் சுற்றித் திரிந்து கானான் தேசத்திலும், அதற்கு தெற்கே சீனாய் மலைநாட்டிலும் தங்கியிருந்தனர். ஆபிரகாம் சந்ததியார் ஐபிராத்து ஆற்றைத் தாண்டிப்போனதால் 'எபிரெயர்' எனப் பெயர் பெற்றனர். அவர்கள், யோசேப்பு எகிப்தின் அதிபராக இருந்த நாட்களில் எகிப்துக்குச் சென்று பலுகிப் பெருகினர். பின்பு, யோசேப்பை அறியாத ஓர் அரசனின் காலத்தில் அடிமைகளாக்கப் பட்டனர். ஏறக்குறைய 430 ஆண்டுகள் அடிமைகளாக இருந்த இம் மக்களை, மோசே என்னும் தலைவர், ஏறக்குறைய கி.மு. 1450 ஆண்டு வாக்கில் விடுவித்தார். சுமார் 40 ஆண்டுகள் பாலைவனப் பயணம் செய்து கர்த்தர் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் செய்த கானான் தேசத்தை வந்து அடைந்தனர். கி.மு. 1025 வரை மோசே, யோசுவா போன்றவர்களும் பின்னர் நியாயாதிபதிகளும் இவர்களை ஆண்ட பிறகு சவுல் என்ற பென்யமீன் கோத்திரத்தானை முதல் அரசனாக்கி னார்கள். அவர் 40 ஆண்டுகள் ஆண்ட பிறகு தாவீது என்னும் ஈசாயின் குமாரன் கி.மு. 1017-ல் அரசராக்கப்பட்டார். அவரும் 40 ஆண்டு கள் நல்லாட்சி செய்த பிறகு சாலமோன் என்ற தாவீதின் குமாரன், அரசராகி கி. மு. 977—937 வரை 40 ஆண்டுகள் அரசோச்சினார்.

ஏறத்தாழ 120 ஆண்டுகள் ஒரே குடையின் கீழ் இருந்த இஸ் ரவேல் அரசு இரண்டாக உடைந்தது. வடக்கு அரசுக்கு 'இஸ்ரவேல்' நாடு என்றும், தென் அரசுக்கு 'யூதா' என்றும் பெயர். வடநாட்டுக்கு 'யெரொபெயாம்' தென்நாட்டுக்கு 'ரெகொபெயாம்' அரசரானார்கள். வடநாட்டின் தெய்வ வழிபாட்டில் மாசு படிந்து பல்வேறு விதமான ஒழுக்கக் கேடுகள் தலைதூக்க ஆரம்பித்தன. முடிவில் கி. மு. 722-ல் அசீரியா நாட்டு அரசரால் கைப்பற்றப்பெற்று அடிமையானது. தென் நாட்டின் நிலை அவ்வளவு மோசமாக இல்லாவிட்டாலும் பெருமைப் படத்தக்க விதத்தில் அவர்களுடைய ஆட்சியும் இருக்கவில்லை.

யோயாக்கீன் என்னும் அரசனின் காலத்தில் அன்றைய வல்லர சாக விளங்கிய பாபிலோன் நாட்டு அரசன் **நேபுகாத்நேச்சார்** கி மு. 597-ல் முதல் முறையாகவும், **சிதேக்கியா** என்னும் அரசன் காலத்தில் (கி. மு. 588.ல்) முழுமையாகவும் அழித்துப் போட்டு பிரபுக்களையும், ஆசாரியர்களையும் சிறைப்படுத்திச் சென்றான். பாரசீக மன்னன் '**கோரேஸ்**' பாபிலோனை வென்று, அடிமைகளாக இருந்த யூதர்களை விடுவித்து அவர்கள் தாய் நாட்டுக்குத் திரும்பிச்செல்ல உத்தரவிட் டார். செருபாபேல், எஸ்றா, நெகேமியா போன்றவர்கள் தலைமையில், மீண்டும் எருசலேம் பட்டணத்தையும் தேவாலயத்தையும் மதிற் சுவர் களையும் கட்டி மீண்டும் தேவனை ஆராதித்தார்கள். எபிரெயர்கள் கி. மு. 587 முதல் மக்கபேயர்கள் காலம் வரை சற்றேறக்குறைய 250 ஆண்டுகள் பாபிலோனியர்கள், பாரசீகர்கள், மகா அலெக்ஸாண் டர், எகிப்தியர்கள், சீரியர்கள் ஆகியோருக்கு அரசியல் அடிமைகளாக

இருந்த போதிலும், மத சுதந்தரம் உள்ளவர்களாக வாழ்ந்து வந்தார்கள். பின்னர் மக்கபேயர்கள் தலைமையில் அந்நிய ஆதிக்கத்தை உடைத்தெரிந்து சுதந்திரமாக சிலகாலம் வாழ்ந்தனர். ஆனால் கி.மு. 63-ல் ரோமர்கள் எருசலேமைப்பிடித்து தங்கள் ஆதிக்கத்தின் கீழ்கொண்டு வந்தனர். ரோம அரசின் சார்பில் ஏரோதின் குடும்பத்தினர் ஆளுகை நடத்தினர். அவர்களுள் தலைசிறந்தவர். கி.மு. 37-4 வரை அரசாண்ட பெரிய ஏரோது ஆவார். அடிமைகளாக இருந்த நிலையிலேயே அவர்கள் அரசுக்கு எதிராக அடிக்கடி கலகம் செய்து கொண்டே இருந்தார்கள். இறுதியாக ரோமத்தளபதி 'தீத்து' (Titus) என்பவர் எருசலேமை முற்றுகையிட்டு தேவாலயத்தையும் அழித்து நிர்மூலமாக்கி விட்டான். இப்படியாக தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட எபிரெய இனத்தின் பூர்வீக வரலாறு பரிதாபமாக முடிவு பெறுகிறது.

## இந்த நாட்டைப் பற்றி சில குறிப்புகள்:

1. **எல்லைகள்:**
   வடக்கே: லிபனோன் மலைத்தொடரும் எர்மோன் மலையும்
   மேற்கே: மத்தியதரைக்கடலின் கீழ்ப்பகுதியாகிய பெருங்கடல்
   தெற்கே: இதுமேயா என்ற நாடு
   கிழக்கே- அரேபியா பாலைவனம்.

2. **நீளம்:**
   தெற்கு வடக்கில் 153 மைல்கள்
   அகலம்: வடபாகத்தில் 23மைல்கள் தென்பகத்தில் 93மைல்கள்
   நாட்டின் பரப்பு: 9700சதுர மைல்கள்.

3, **முக்கிய நதி:**
   யோர்தான்
   உற்பத்தி ஸ்தாபனம்: லிபனோன் மலை
   (கடல் மட்டத்துக்கு மேல் 1696அடி)
   சங்கமம்: சாக்கடல் (கடல் மட்டத்துக்குக் கீழ் 1300 அடி)
   பாயும் இடம்: ஹலொ, திபேரியா
   நீளம்: 103 மைல்கள்.

4. **கடல்கள்:**
   திபேரியாக் கடல், இதன் வேறு பெயர்கள்:
   கலிலேயாக் கடல். கெனசரத்துக்கடல்.
   நீளம்: 13 மைல்கள்

   அகலம்: விரிவான இடத்தில் $7\frac{1}{2}$ மைல். மதுரமான தண்ணீர், நிறைய மீன்கள் உற்பத்தியாகும். இதைச்சுற்றியுள்ள பட்டணங்களும், ஊர்களும் நமது ஆண்டவராகிய கிறிஸ்துவுக்கு நன்கு அறிமுகமானவைகள்.

சாக்கடல், நீளம் தென்வடலில் 47 மைல்கள்
அகலம்: மிக அதிகமான இடத்தில் 10 மைல்கள்.
கடல் மட்டத்துக்குக் கீழ் 1300 அடி. உலகத்திலேயே மிகப் பள்ளமான இடம் என்று கருதப்படுகிறது. தண்ணீர் மற்ற கடல் நீரைக் காட்டிலும் மிக உப்பானது. கடலில் வாழும் சராசரி உயிரினங்கள் வாழத் தகுதியற்றது.

5. மலைகள்:
லிபனோன் சுமார் 100மைல் தூரம் பரவியுள்ள இம் மலைத் தொடர் பாலஸ்தீன நாட்டின் வடக்கு எல்லையாக அமைந்-துள்ளது. இதன் மிக உயர்ந்த சிகரம் 10,020 அடி. மிக அடர்த்தியான இதன் காடுகளில் கேதுரு மரங்கள் என்னும் ஒரு வகை உயர்ந்த ரக மரங்கள் கிடைக்கின்றன.

எர்மோன்: ஏன்ட்டி லீபனோன் மலையின் (Anti Lebanon) தென் கோடியில் உள்ள சிகரம். இங்கேதான் மத்தேயு சுவிசேஷகன் குறிப்பிடுகிற இயேசு மறு ரூபமான சம்பவம் நடந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது (மத்தேயு17 : 1 ff)ஒரு காலத்தில் பாகால் விக்கிரக ஆராதனைக்காரர்களின் கூடாரமாக இருந்தது (நியாயாதிபதிகள் 3:1 ff.)

கர்மேல்: மத்தியதரைக் கடலுக்குள் நீண்டு கொண்டிருக்கிற ஒரு மலை. இங்கேதான் ஆகாப் அரசன் காலத்தில் பாகால் தீர்க்கதரிசிகளுக்கும் யெகோவாவின் ஊழியக்காரனான எலியா தீர்க்கதரிசிக்கும் மெய்யான தேவன் யார்? என்பதை நிரூபிக்கும் வாய்ப்புக் கொடுக்கப்பட்டது. 1 ராஜா 18-ம் அதிகாரம்.

கெரிசிம்: கர்த்தரால் ஆசீர்வதிக்கும்படி இஸ்ரவேல் கோத்திரத்தில் சிலரை மோசே கூட்டிச் சேர்த்த இடம். உபா 27:11-26.

இந்த மலையின் மேல் சமாரியர் தங்களுக்கு ஒரு ஆலயத்தைக் கட்டி அங்கே தொழுது வந்தார்கள். யோ 4 ; 20, 21.

ஒலிவமலை: எருசலேமிலிருந்து ஒரு ஓய்வு ஓய்வு நாள் பிரயாண தூரத்தில் உள்ளது. இயேசு கிறிஸ்து இந்த மலைக்கு அடிக்கடி ஓய்வுக்காகவும், ஜெபம் செய்வதற்காகவும் போவது வழக்கம். கெத்சமனே தோட்டமும், பெத்பாகே பெத்தானியா, ஆகிய ஊர்களும், இம்மலையின் சரிவிலும், அடிவாரத்திலும் இருந்தன.

ஏபால்; சமாரியாவில் கெரிசிம் மலைக்கு எதிராக உள்ளது. கர்த்தருடைய சாபத்தைப் பெற்றுக்கொள்ளும்படி இஸ்ரவேல் கோத்திரத்தாரில் சிலரை மோசே கூட்டிச்சேர்த்த இடம். உபா; 27 : 13 ff

6. முக்கிய பட்டணங்கள்:
எருசலேம் தாவீது அரசனால் நிர்மாணிக்கப்பட்ட நகரம். ஒன்றுபட்ட இஸ்ரவேல் சாம்ராஜ்யத்தின் தலைநகராகவும், பின்னர் யூதா ராஜ்யத்தின் தலைநகராகவும் விளங்கியது. சாலமோன் ராஜா இங்கே

பிரசித்தி பெற்ற தேவாலயத்தைக் கட்டினுர். யூதர்களும், கிறிஸ்தவர் களும் இந்நகரை ஒருபுண்ணிய நகரமாகக் கருதுகின்றனர்.

சமாரியா: பிளவுபட்ட இஸ்ரவேல் சாம்ராஜ்யத்தின் வட பகுதியாகிய சமாரியா தேசத்தின் தலைநகர். இந்த நகரம் ஓம்ரி என்ற அரசனால் நிர்மாணிக்கப்பட்டது.

பெத்லகேம்: எப்பிராத்தா என்று மறு பெயரும் உண்டு. யாக் கோபின் முதல் மனைவியும், யோசேப்பு, பென்யமீன் என்பவர்களின் தாயாருமாகிய ராகேல் அடக்கம் பண்ணப்பட்ட இடம். தாவீது அரச னின் சொந்த ஊர். இயேசுவின் பிறப்பிடம்.

நாசரேத்: இயேசுவின் தாயாரும், அவள் கணவர் யோசேப்பும் வாழ்ந்த ஊர். இயேசு தம் இளமை பருவத்தில் இங்கேதான் வளர்ந்தார்.

கப்பர்நகூம்: தமது ஆண்டவருடைய கலிலேயா ஊழியத்தின் மையம். அங்கே அவருக்கு ஒரு இருப்பிடம் இருந்திருக்கலாம் என எண்ணத்தோன்றுகிறது.

எரிகோ: பள்ளமான நகரம். கடல் மட்டத்துக்குக் கீழ் 800 அடி தாழ்வானது. உலகிலேயே பழமையான நகரம் என்று கருதப்படு கிறது.

சீகார்; யாக்கோப்பின் கிணறு இருந்த நகரம். இயேசு சமாரியா ஸ்திரியாகிய ஒரு விலைமாதை மனமாற்றி இரட்சிப்பின் பாதையில் வழி நடத்தினுர்.

செசரியா பிலிப்பி: காற்பங்கு தேசாதிபதியாக இருந்த பிலிப்பு என்பவன் ரோமச் சக்கரவர்த்தி சீசரின் நினைவாக நிர்மாணித்த நகரம். இந்த நகரில்தான் பேதுரு இயேசுவை மேசியா என்று தெளிவாக அறிக்கை செய்தார்.

பெத்தேல்: லூஸ் என்பது இயற்பெயர். முற்பிதாக்களில் ஒரு வராகிய யாக்கோபைத் தேவன் சந்தித்த இடம். யெரோபெயாம் என்னும் வட இராஜ்ஜியத்தின் முதல் அரசன் தமது குடிமக்கள் தொழுகைக்கு எருசலேம் தேவாலயத்துக்குப் போவதை தடுத்து நிறுத்த விக்கிரக ஆராதனைக்கு ஏற்பாடு செய்த இரண்டு நகரங்களில் ஒன்று.

தாண்: இயற்பெயர் லேசேம், பலஸ்தீன தேசத்தின் வடக்கு எல்லை,

சீகேம்: ஆபிரகாம் கானான் தேசத்துக்குள் கால் வைத்த முதல் இடம். எகிப்தின் ஆளுநராகப் புகழுடன் வாழ்ந்த யாக்கோப்பின் குமாரன் யோசேப்பு அடக்கம் பண்ணப்பட்ட இடம். யெரோபெயாம் தான் அரசனானதும் தன்னுடைய அரண்மனையை இங்கே கட்டிக் கொண்டான்.

ஷீலோ: உடன்படிக்கைப் பெட்டி வைத்திருந்த இடம்; ஏலி, சாமுவேல் தீர்க்கதரிசிகள் வாழ்ந்த நகரம்.

# கிறிஸ்தவர்கள்—அன்றும், இன்றும்.

1900 ஆண்டுகளுக்கு முன்னர் இயேசு கிறிஸ்துவின் சீடர்கள் எவ்வாறு செயல்பட்டனரோ, அவ்விதமே இன்றும் நாம் செயல்பட முடியும். இந்த இடைப்பட்ட நீண்டகால கட்டத்தால் நற்செய்தியின் வல்லமையை மறைக்கவோ, குறைக்கவோ முடியவில்லை. இன்றும் அதுவே நம் இரட்சிப்பின் செய்தியாக உள்ளது. —ரோமர் 1:16.

ஒரு உதாரணத்துடன் நமது கூற்றை இங்கு விளக்குவோம். இன்று பிரபலமாக விளங்கும் கிரிக்கெட் விளையாட்டு, அடுத்து வரும் பல நூற்றாண்டுகளாக மக்கள் மனதிலிருந்து மறைந்து போவதாக வைத்துக் கொள்வோம். ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர், அதாவது 2989-ஆம் ஆண்டு, ஒரு மனிதர் கிரிக்கெட் ஆட்டத்தைப் பற்றித் தெரிந்துகொள்ள விரும்பி, '1989-ஆம் ஆண்டில் கிரிக்கெட் விளையாட்டு விதிமுறைகள்' என்ன என்பதை அறிகிறார். நண்பர்களுடன் இணைந்து மேற்சொன்ன விதிமுறைகளை அப்படியே பின்பற்றி கிரிக்கெட் ஆடுகிறார். அப்படியானால் இன்று நாம் காணும் அதே கிரிக்கெட் விளையாட்டைத் தானே 2989-ஆம் ஆண்டும் காணமுடியும்! காலம் கடந்ததால் ஆட்ட விதிகள் மாறி விடுமா? இல்லையே. இதேநிலைதான் கிறிஸ்துவத்துக்கும் பொருந்தும். புதிய ஏற்பாட்டிற்குக் கீழ்ப்படிந்து அதில் குறிப்பிட்ட சபை ஒழுங்குகளை கடைப்பிடித்தால் இன்னும் தேவனுடைய அதே சபையில் தான் நாம் அங்கத்தினராக இருப்போம்.

தனது சொந்த இரத்தத்தால் இயேசுகிறிஸ்து சம்பாதித்த சபை பல பிரிவுகளைக் கொண்டதுஅல்ல. புதிய ஏற்பாட்டு சபை பிரிவுகள் அற்றது. கிறிஸ்துவின் சரீரமாகிய சபை உலகில் இன்று உள்ளது போல 300-க்கும் அதிகமான பிரிவுகளை உடையதல்ல.

மேலே கூறியவற்றை மறுத்து குரல் எழுப்புகிறார் ஒரு பிரிவினை சபை நண்பர். 'ஐயா போதகரே! யோவான் 15-ஆம் அதிகாரத்தில் திராட்சை செடியும் அதன் கொடிகளும் பற்றிய உவமையை நீங்கள் படிக்கவில்லையா? 'நானே திராட்சைச் செடி, நீங்கள் கொடிகள்' என இயேசுகிறிஸ்து கூறியது சபை பிரிவுகளைப்பற்றித்தானே?' என்கிறார் அவர்.

இல்லை. இல்லவே இல்லை. இயேசுகிறிஸ்து 'நீங்கள் கொடிகள்' எனக்கூறியது சபை பிரிவுகளைப்பற்றி இல்லை நண்பரே! ஏனென்றால்:

1. 'நீங்கள் கொடிகள்' என இயேசு கிறிஸ்து குறிப்பிட்டது. தனி மனிதர்களைப்பற்றியே, ஒரு சபை பிரிவை அல்ல.

2. மேற்சொன்ன வசனம் பிரிவினை சபையின் கூற்றை பொய்யாக்குகிறது. இயேசு கூறினார், "நானே திராட்சை செடி, நீங்கள் கொடிகள்". ஒருவன் என்னில் நிலைத்திரா விட்டால் வெளியே எறியுண்ட கொடியைப்போல அவன் எறியுண்டு உலர்ந்து போவான்"
யோவான் 15:5–6,

3. "நானே திராட்சை செடி, நீங்கள் கொடிகள்" என இயேசு கூறியபோது, தற்காலத்திய பிரிவினைகளை ஆதரித்து அவ்வாறு பேசவில்லை (மாறாக, யோவான் 17ம் அதிகாரத்தில் பிரிவினைக்கு எதிராக ஜெபிக்கிறார்) இன்றைய பிரிவினை சபை எதுவுமே அவர் காலத்தில் தோன்றியிருக்கவில்லையாதலால் அது பற்றி அவர் குறிப்பிட்டிருக்க முடியாது.

4. திராட்சைச் செடி திராட்சை கனிகளை மட்டுமே தரும். வேறு எவ்விதக்கனியையும் அது தராது. பிரிவினையை இயேசு ஆதரித்தால் அதற்கேற்றாற்போன்ற வேறு ஏதாவது உவமையை அவர் கூறியிருப்பார். திராட்சைப்பழம், வாழைப்பழம், ஆப்பிள். தர்ப்பூசணி, இவை போன்ற பழங்கள் எல்லாம் ஒட்டு மொத்தமாக திராட்சை செடியில் காய்ப்பவை அல்ல.

கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு அங்கம் வகிப்பதின் முக்கியத்துவத்தை ஒரு கனம் சிந்திக்கும்படி உங்களை வேண்டுகிறேன். நாம் "கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம்" ரோமர் 6;3:4) பெறும் போது கிறிஸ்துவின் சபையில் அங்கம் வகிக்கிறோம்,என்பதை கலாத்தியர்3:27 வசனத்திலும் 1கொரி, 12:13ம் வசனத்திலும் படிக்கிறோம். நாம் இவ்வாறு செய்யும்போது, கிறிஸ்து அவருடைய சபையிலே நம்மை இணைக்கிறார். (அப்போ 2:47). கிறிஸ்துவின் சபையிலே, நாம் இவ்வுலகில் வாழும் வரை தேவனுக்கு உண்மையாக ஊழியஞ் செய்து, மரித்தபின் முடிவற்ற மோட்ச ராஜ்யத்தில் பங்கு பெறுவோமாக.

மூலம்: ஜானி ராம்செ.　　　　தமிழில்: S, S. ராஜன்.

தூற்றிக்கொண்டு திரிகிறவன் இரகசியங்களை வெளிப்படுத்துவான் ஆதலால் தன் உதடுகளினால் அலப்புகிறவனோடே கலவாதே,
தன் தகப்பனையும், தன் தாயையும் தூஷிக்கிறவனுடைய தீபம் காரிருளில் அணைந்துபோகும்.
தீமைக்குச் சரிக்கட்டுவேன் என்று சொல்லாதே: கர்த்தருக்குக் காத்திரு. அவர் உன்னை இரட்சிப்பார்.
வாலிபரின் அலங்காரம் அவர்கள் பராக்கிரமம்,
முதிர் வயதானவர்களின் மகிமை அவர்கள் நரை.

# ஓர் நற்செய்தி!

"பாவத்தின் சம்பளம் (ஆவியின்) மரணம்" ரோமர் 6 : 23; 5:12. மனிதன் தன் பாவங்களின் விளைவாக தேவனிடமிருந்து பிரிக்கப் பட்டிருக்கின்றான் (ஏசாயா 59:1-2) எவ்வித நம்பிக்கையுமின்றி ஆவியில் மரித்துப் போயிருக்கிறான் (எபே.2;1) தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ளும் சக்தி அவனுக்கு இல்லை.

சகல மனிதர்களின் ஆவியின் நிலையும் இதுவே. ஏனெனில் "எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையற்றவர்களாகி" விட்டனர். (ரோமர் 3:23). பாவமும் அதன் விளைவுகளும் உலகளாவியது. உலகிலுள்ள சகல மக்களும் பாவத்தினால் குற்றவாளிகளாக்கப்பட்டு, தண்டனைக்குரியவர்களாயிருக்கின்றனர்.

பாவம் மனிதரின் பேரிழப்பு: அவர் உள்ளத்தில் ஏறிய விஷம்; நாட்டின் சாபக்கேடு; வாழ்க்கையின் தொழுநோய்; சமுதாயத்தின் சீர்கேடு; ஆத்துமாவின் புற்று நோய்.

பாவத்தின் விளைவுகளிலிருந்து நம்மைக் காத்துக்கொள்ள இயலாது. நம்மில் யாரும் நம்மை மன்னிக்கவோ, பாவப்பரிகாரமாக தண்டனை தரவோ முடியாது. (தீத்து 3 : 5; ரோமர் 3:10),

மனிதத் தத்துவங்களோ, ஞானமோ, அல்லது நமது சமுதாயத்தின் உச்ச நிலையோ பாவத்தால் கறைபட்ட ஆத்துமாவை கழுவ இயலாது. (எரே. 10:23). உதவிக்காகவும் இரட்சிப்புக்காவும் நாம் கதறுகிறோம். யாரிடம் செல்வோம்?

நாம் செல்ல வேண்டியது இயேசு கிறிஸ்துவிடம். ஏனென்றால் தேவனின் அன்பும் இரக்கமும் இயேசுகிறிஸ்து வழியாக நமக்கு இரட்சிப்பைக் கொண்டு வந்துள்ளது. (எபி 2 : 9).

இது எவ்வாறு சத்தியம்? பாவ மாசற்ற இயேசு எனக்காகப் பலியாக்கப்பட்டார் நமது பாவங்களை தமது சரீரத்தில் ஏற்று மரத்தில் தொங்கினார் (1 பேது 2 : 24). தேவன், "பாவமறியாத அவரை (இயேசுவை) நமக்காக பாவமாக்கினார்" (1 கொரி 5:21) அவருடைய ஆத்மா நமது பாவங்களுக்காகப் பரிகாரமாக்கப்பட்டது(ஏசாயா53:10) பரிசுத்தமானவருடைய மரணம் நமது பாவத்துக்கு தண்டனையாக்கப் பட்டது (ஏசாயா 53:11). பாவத்துக்கு விலை கொடுக்கப்பட்டது.

இயேசுவைத் தவிர வேறு வழியில்லை (யோவான் 14 : 6) இயேசுவை புறக்கணிப்பது நமது பாவங்களின் விலையை நாமே கொடுப்பது போலாகும். ஆனால் இது நம்மால் சாத்தியமா? இல்லை.

எனவே. நாம் இயேசுவிடம் செல்வோம். நமது விசுவாசத்தையும் நம்பிக்கையையும் அவர் பேரில் வைப்போம். நாம் ஒன்றுமில்லா குப்பை. இயேசு கிறிஸ்துவுக்குள் நாம் முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாகிறோம். (ரோமர் 8:37) நாம் சந்தேகம், பயம் நீங்கப்பெறுகிறோம். நமது பாவங்கள் நீங்க அவருடைய இரத்தத்தால் சுத்திகரிக்கப்படுகிறோம். (வெளி 1:6).

இந்த நற்செய்தியை நீங்கள் ஏற்றுக்கொள்கிறீர்களா? அவரிடம் நம்பிக்கை வைத்து இரட்சிக்கப்படுவீர்களா? (யோவான் 3:16) 'விசுவாசித்து திருமுழுக்குப்பெறுபவன் இரட்சிக்கப்படுகிறான்" (மாற் 16:16) என் இயேசு கூறினார்.

"....மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்".. (அப்போஸ் 2:38).

எவ்வளவு மகிழ்ச்சியான செய்தி! "தமக்குக் கீழ்ப்படிகிற யாவரும் நித்திய இரட்சிப்பை அடைய" வழி வகுத்தார் (எபி 5 ; 9) அவர் ஒளியிலிருக்கிறது போல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம், அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மை சுத்திகரிக்கும்.
(1 யோவான் 1:7)

இரட்சிப்படைய இன்னும் தாமதம் ஏன்? உங்கள் சுய பெலத்தை நம்பி ஏமாறுமல், இயேசுகிறிஸ்துவின் நம்பிக்கை வைக்க அவரை விசுவாசித்து அவருக்கு கீழ்ப்படிய வேண்டியது அவசியமாகும். வேறு வழியே இல்லை.

---

சண்டைக்காரியோடே ஒரு பெரிய வீட்டில் குடியிருப்பதைப் பார்க்கிலும் வீட்டின்மேல் ஒரு மூலையில் தங்கியிருப்பதே நலம்.

சண்டைக்காரியும் கோபக்காரியுமான ஸ்திரீயுடன் குடியிருப்பதைப் பார்க்கிலும் வனாந்திரத்தில் குடியிருப்பது நலம்,

தன் வாயையும் தன் நாவையும் காக்கிறவன் தன் ஆத்துமாவை இடுக்கண்களுக்கு விலக்கிக் காக்கிறான்.

மனுஷனுடைய வழியெல்லாம் அவன் பார்வைக்குச் செம்மையாகத் தோன்றும்: கர்த்தரோ இருதயங்களை நிறுத்துப் பார்க்கிறார். பலியிடுவதைப் பார்க்கிலும் நீதியும், நியாயமும் செய்வதே கர்த்தருக்குப் பிரியம்.

---

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

பெருமை பாராட்டுகிறார்கள். 1 யோவான் 4:6-ன்படி அவர்கள் வஞ்சக ஆவியினால் பீடிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. தயவுசெய்து அவர்களுக்காக ஜெபியுங்கள். அவர்களுக்காகவும் கிறிஸ்து மரித்தாரே.

அதேபோன்று தற்கால தெய்வீக சுகம் என்பதும் வெறும் விளம்பரமே. அப் 3:2–ல் சொல்லப்பட்டிருக்கிற முடவன் யாராலும் சுகப்படுத்த முடியாத அளவுக்கு பிறவிலேயே முடவன். அவனைப் பேதுருவும், யோவானும், அனைவரும் பார்த்துக் கொண்டிருக்கும் போதே சுகமாக்கினார்கள். அவனும் நடந்து குதித்துக் குதித்து நடந்து பார்ப்பவர்களை பிரமிக்க வைக்கிறான். தற்கால தெய்வீக சுகம் கொடுக்கிறோம் என்று கூறும் நபர்கள் வியாதி இருக்கிறதா? இல்லையா? என்று மக்கள் புரிந்து கொள்ளமுடியாத சந்தேகக் கேசுகளைத் தெரிந்து கொண்டு பழைய ஏற்பாட்டுப் பாகால் தீர்க்கதரிகளைப் போல் ஆட்டம் போட்டு, கூச்சல் பண்ணிக் கும்மாளம் அடித்து, ரகளை பண்ணி புறவினத்தார் கிறிஸ்துமேலே கொண்டிருக்கிற கொஞ்சம் நஞ்சம் மரியாதையையும் கெடுத்து வருகிறார்கள். அப்போஸ்தர்கள் வியாதிகளைச் சுகப்படுத்தின பொழுது எதிரிகள் கூட மறுத்துப் பேசமுடியவில்லை. (அப் 1 : 16) யென்பதை வாசித்துப் பார்த்து இவர்களை அடையாளம் கண்டு கொள்ளுங்கள்.

மேலும், அப்போஸ்தர்கள் தங்களிடத்தில் கொண்டு வரப்பட்ட அனைத்து நோயாளிகளையும் சுகப்படுத்தினார்கள் அப் 5:6, ஆனால் தற்காலத்தில் இந்தப் பேர்வழிகள் கும்பகோணத்தில் கூட்டம் போட்டுக் கோயமுத்தூரில் சுகமடைந்தவர்களைப் பற்றிச் சொல்லுவார்கள்: சேலத்தில் கூட்டம் போட்டு செங்கல்பட்டில் சுகமடைந்தவர்களின் பட்டியலை வாசிப்பார்கள். 'பல கூட்டங்களுக்கு வந்து கொண்டேயிருக்கிறேன்; எனக்கு இன்னும் சுகம் கிடைக்க வில்லையே' என்று ஏக்கத்தோடு கேட்கும் ஏழையைப்பார்த்து. "உனக்கு விசுவாசம் இல்லை, அதனால் சுகம் கிடைக்கவில்லை" என்று பழிபோட்டு விடுவார்கள் அல்லது மெல்லத்தான் சுகம் ஆகும் என்று மழுப்புவார்கள் எங்கள் பாஸ்டருக்கு. ஆண்டவர் டெலிபோன் பேசுவார். அது வரையிலும் நீ உபவாசம் இருந்து ஜெபம் பண்ணு: சுகம் கிடைத்தால். எங்கள் பத்திரிகையில் சாட்சி எழுதுவேன் என்று பொருத்தனை பண்ணிக்கொள் என்று பேரம் பேசுவார்கள். பிரேதக்குழியில் கிடந்த லாசருக்கு எந்த விசுவாசம் இருந்தது? என்று கேட்கத் தெரியாத அப்பாவி மக்களிடம் தானே, இவர்கள் வியாபாரம் எல்லாம் (யோவான் 11:39-44.) நாங்கள் அப்போஸ்தலர்களைவிட ஒன்றும் குறைந்தவர்கள் இல்லை, என்று வீராப்புப் பேசும் இந்த நண்பர்கள் அப்போஸ்தலர்களைப் போல மரித்தவர்களை எழுப்புவார்களா? (அப் 20:10-12) கொடியவிஷ ஜந்து தீண்டி-

ஞாலும் மரிக்காமல் இருப்பார்களா? (அப் 28:3-6) நீர் மேல் நடப்பார்களா? (மத் 14:29) மாட்டார்கள் ஏனெனில் அவர்களால் முடியாது. ஏன் முடியவில்லை? ஏனெனில் அவைகள் என்ன நோக்கத்துக்காகக் கொடுக்கப்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறிவிட்டது(மாற்கு16:20) இனிமேல் 20 நூற்றாண்டுக்கு பிறகு இவர்கள் எதை உறுதி செய்ய இப்படி அலட்டிக் கொள்கிறார்களோ தெரியவில்லை, அப்படிப்பட்டவர்களைக் கண்டால் வெறுத்து ஒதுக்காதீர்கள். அது அவர்களுடைய குற்றமன்று; அந்த பொல்லாத பிசாசு-தேவனுக்கும் மனுஷனுக்கும் சத்துரு அவர்களுடைய கருத்தைக் குருடாக்கி விட்டான், (2கொரி4:4) அவர்களுக்கு பிரகாசமான மனக்கண்களைக் கொடுக்கும்படி பிதாவினிடம் வேண்டிக்கொள்ளுங்கள் (எபே 1:19)

E. Z. செல்வநாயகம்.

(23-ஆம் பக்கத் தொடர்ச்சி)

நண்பரே; மேலே கூறப்பட்டுள்ள அறிகுறிகள் உன் நண்பர்களுக்கோ அல்லது உங்களுக்கோ ஏற்பட்டிருந்தால் கீழ்வருவனவற்றை வாசித்து தியானிப்பதால் குறைந்த பட்சம் இரண்டு நன்மைகள் உண்டாகும். நீங்கள் தேவப் பிரசன்னத்திலிருந்து வெகுதூரம் விலகிச் சென்றிருந்தீர்களானால் அந்த உண்மையை உங்களை உணரச் செய்யும். மேலும், தேவ சமூகத்தைத் தேடித் திரும்பி அவரிடம் வந்து சேர இது உங்களை ஊக்குவிக்கும்.

வழுவிச் சென்ற ஒருவர் எப்படியிருப்பார் என்று உன்னால் புரிந்து கொள்ள முடியவில்லையா? நான் உனக்குச் சொல்லுகிறேன். வா, அருகில் உட்கார்.

1. விசுவாசிகளோடு நட்புரிமையில் ஆவல் குறையும்.
2. சபை ஆராதனையில் வழிபட விருப்பம் குறையும்.
3. குடும்பத்தாரோடும் தனிப்பட்ட முறையிலும் ஜெபம் இடம் பெறாது.
4. மற்றவர்களின் பிரச்சனைகளைக் குறித்து ஒரு கரிசனையும் இருக்காது.
5. ஆன்மிக வளர்ச்சியில் எந்தவித ஆர்வமும் இருக்காது.

மேலே சொல்லப்பட்டுள்ள காரியங்களுக்கு உன்னுடைய பதில் 'ஆம்' என்று இருந்தால் உம்முடைய விசுவாச வாழ்க்கையில் ஏதோ ஒரு கோளாறு என்று அர்த்தம். நீ திரும்பமுடியாத ஒரு நிலைக்குப் போவதற்கு முன்பாக உன்னைச் சீர் செய்துகொள். ஏனெனில் மரணம் எப்பொழுது உன்னைச் சந்திக்கும் என்று உனக்குத் தெரியாது. மரணத்துக்குப் பிறகு மனம் திரும்புதல் இல்லவே இல்லை.

# மரணத்திற்குப் பிறகு மனம்

# திரும்புதல் கிடையாது

சமுதாயத்திற்கு தம் சொந்த முயற்சியால் நன்மை செய்து கொண்டு வந்து நேர்மையான மனிதர் ஒருவர் திடீரென்று தாம் செய்த ஏதோ ஒரு தவறினால், துன்பத்துக்குள்ளானதைப் பற்றி அடிக்கடிப் பத்திரிகைகளில் படிக்கிறோம். இவர் வேலையிழந்து, தம் குடும்பத்தைப் பிரிந்து, வாழ்க்கையில் தோல்வியடைந்ததைக் காணும் போது நாம் பரிதபிக்கிறோம். இது போலவே நல்ல மதிப்புடன் வாழ்க்கை நடத்திய ஒருவர் அந்நிலையிலிருந்து வீழ்ச்சியடைவதைக் காணும் போதும் நாம் அவருக்காகப் பரிதாபப்படுகிறோம்.

இவைகளை விட தமக்கு என்ன நேரிடுகிறது என்பதை அறியாமலேயே ஒருவர் வீழ்ந்து கொண்டு போவது இன்னும் பரிதாபத்திற்குரியது. இந்நிலையிலுள்ளவர் தாம் செய்ய வேண்டிய வேலையைச் சரிவரச் செய்வதில்லை. ஒரு காலத்தில் தம் தோற்றத்தை மிகுந்த சிரத்தையுடன் கச்சிதமாக வைத்துக் கொண்டிருந்த இவர் இப்போது அதைப் பற்றிச் சற்றேனும் கவலைப் படுவதில்லை. இவர் முன்னை விட அடிக்கடிக் கோபப்படுவதைக் காணலாம். இவர் உபயோகிக்கும் வார்த்தைகள் கூட முன் போல் அன்பைப் பிரதிபலிப்பதில்லை. தன்னைச் சார்ந்தவர்களிடம் அன்பற்ற முறையில் நடந்து கொள்ளுகிறார். அவருடைய நண்பர்கள் இதையெல்லாம் காணும்போது செய்வதறியாது திகைக்கின்றனர். ஏனென்றால் அவர்கள் அவருக்குப் புத்தி சொல்வதையோ உதவி செய்ய முன் வருவதையோ அவர் ஏற்றுக் கொள்வதில்லை.

ஆம். இவ்விதமான படிப்படியாக முறையான வாழ்க்கை நிலையிலிருந்து ஒருவர் இறங்கி வருவதைக் காணும் போது நமக்குத் துக்கமாக இருக்கிறது. முக்கியமாக ஆன்மீக வாழ்க்கையில் இப்படிப் படிப்படியாக இறங்கி வருவதைப் பார்க்கும்போது அது மிக்க வேதனையைத் தருகிறது. தேவனோடு இருந்த நெருங்கிய உறவை விட்டு மெல்ல மெல்ல தூர இழுத்துச் செல்லப்படும் போது விசுவாசிகள் கிறிஸ்துவின் சமூகத்திலிருந்து படிப்படியாக இறங்கி விடுகிறார்கள். அவர்கள் அவரோடு கொண்டிருந்த தோழமை குறைகிறது, சிறுகச் சிறுக சாத்தானின் ஆதிக்கமும், தற்சார்பில் நம்பிக்கையும் பிறக்கிறது. தேவனைச்சார்ந்து நடத்திய அவர்கள் வாழ்க்கையில் தேவனைக் குறித்தும் திருச்சபையைக் குறித்தும் ஈடுபாடு குறைந்து விடுகிறது. மேலும் ஒரு சமயம் விசுவாசமென்னும் ஒளி மங்கி அணைந்து போகும் அபாயத்தில் இருக்கிறது. மாதங்களும் வருடங்களும் செல்லச் செல்ல தேவ சமூகத்திலிருந்து அவர்களும் தடுமாறி அலைந்து விலகிச் செல்லுகிறார்கள்.

(இதன் தொடர்ச்சி 22-ஆம் பக்கம் பார்க்க)

# மத்தேயு எழுதிய நற்செய்தி நூல்

## ☆ ஓர் கண்ணோட்டம் ☆

### அப்போஸ்தலர் மத்தேயு

'மத்தேயு' என்னும் சொல் எபிரேய மொழியில் ஆண்டவருடைய கொடை' எனப் பொருள் படும். 'லேவி' என்றும் அவர் அழைக்கப்பட்டார். (லூக் 5:27.) மாற்றான் உரோமையருக்குப் பணிபுரிந்து வந்த தண்டற்காரர்களாகிய வரிவாங்குவோருள் இவரும் ஒருவர். மக்கள், உரோமையரின் ஊழியர்களாயிருந்த தம்மவரைச் சபிக்கப்பட்டவர்கள், தூய்மையற்றவர்கள். விலக்கப்பட்டவர்கள் எனக் கருதி வந்ததால், இவரும் மக்களுடைய இகழ்ச்சிக்கும் வெறுப்புக்கும் ஆளானார். எனினும், 'பாவிகளையே அழைக்க வந்தேன்' (மத் 9:13) என்று கூறியே இயேசு அவரைத் தேர்ந்துகொண்டார். ஒருநாள் கலிலேயாவின் கெனெசரெத் ஏரிக்கரையிலுள்ள கப்பர்நகூம் என்ற பட்டினத்தின் சுங்கத்துறையில் மத்தேயு அமர்ந்திருக்கும் பொழுது, அவ்வழியே போய்க்கொண்டிருந்த இயேசு அவரை நோக்கி, "என்னைப் பின்பற்றிவா' (மத் 9 : 9) என்றார். அவரும் யாவற்றையும் விட்டு விட்டு அவரைப் பின்சென்று பன்னிரு சீடர்களுள் ஒருவரானார்.

புதிய ஏற்பாடு அவரைப் பற்றி வேறு எதுவும் கூறவில்லை. ஆனால், பரிசுத்த ஆவியின் வருகைக்குப் பின் அவர் எத்தியோப்பியாவில் நற்செய்தியைப் போதிக்கச் சென்றதாகவும், அவன் வேதசாட்சியாய் உயிர் நீத்ததாகவும் பாரம்பரியம் கூறுகின்றது.

### மத்தேயு எழுதிய சுவிசேஷம்

இயேசுவின் சொல்லையும் செயலையும் தொகுத்து எழுதியோருள், மத்தேயு முதல்வராவார், அவர் கிறிஸ்தவர்களான யூதமக்களுக்கு இச் சுவிசேஷத்தை எழுதினதாக பாரம்பரியம் கூறுவதை ஆய்வாளர்களும் உறுதிப்படுத்துகிறார்கள். ஆகையால், அக்காலத்தில் பலஸ்தீன நாட்டில் வழக்கிலிருந்ததும், இயேசுவின் தாய்மொழியாகிய அரமாயிக் (Aramaic) மொழியிலே எழுதலானார். அம்மொழி இன்னும் கேரளாவில் சீரியக் ரீதி இறைவழிபாட்டில் வழங்கப்படுகிறது. அவர் இச்சுவிசேஷத்தை கி. பி. 40-ஆம் ஆண்டுக்குப்பின் 50-ஆம் ஆண்டுக்குள்ளாக எழுதியிருக்கவேண்டும். பின்னர், 70-ஆம் ஆண்டுக்கு முன்னதாகவே, அவராலோ அவருடைய சீடர்களுள் ஒருவராலோ, அது உரோமை அரசு முழுவதிலும் வழக்கிலிருந்த பொது மொழியாகிய கிரேக்க மொழியிலே பெயர்த்தெழுதப்பட்டது. அந்த மொழி பெயற்பிற்குரிய சூழ்நிலையில், தெய்வத் தூண்டுதல் காரணமாக ஒரு சில மாற்றங்களும் சேர்க்கைகளும் ஏற்பட்டிருக்கலாம் அஃது எவ்வாறாயினும், அரமாயிக் மொழியில் எழுதிய முதல் நூல் இன்று இல்லை. நம்மிடமிருக்கும் கிரேக்க நூல்தான் கடவுள் ஏவுதலால் எழுதப்பட்ட நூலாகச் திருச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

## நூல் அமைப்பு

மத்தேயு சுவிசேஷம் முன்னுரை, முடிவுரை நீங்கலாக ஐந்து பாகங்களாகக் கொண்டுள்ளது. முன்னுரை இயேசுவின் பிறப்போடு இணைந்துள்ள நிகழ்ச்சிகளைக் கூறுகிறது. முடிவுரை இயேசுவின் பாடுகளையும் உயிர்த்தெழுதலையும் எடுத்துரைக்கிறது. பழைய ஏற்பாட்டின் சாரம் அடங்கிய ஐந்து சட்டப் புத்தகங்களையும் நினைவூட்டுவதற்காக மத்தேயு தாம் எழுதிய சுவிசேஷத்தை ஐந்து பாகங்களாகப் பிரித்து இருக்கலாம். இவ்வாறு நூலின் அமைப்பே, கிறிஸ்துவின் வாழ்க்கையும் செயலும் பழைய ஏற்பாட்டை நிறைவேற்றுகின்றன என்பதைக் குறித்துக்காட்டும்.

இந்த ஐந்து பாகங்களும் தனித்தனியே நிகழ்ச்சிப் பகுதி, அறிவுரைப் பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளன. எனவே, இந்நூல் பின்வரும் பிரிவுகளாலமைக்கப் பெற்றுள்ளது.

| | அதிகாரம் |
|---|---|
| 1. இயேசுவின் பிறப்பும், இளமைப் பருவமும் | 1, 2 |
| 2. விண்ணரசு அறிவிக்கப்படுகிறது | 3—7 |
| (i) நிகழ்ச்சிப் பகுதி—(அதி. 3, 4) | |
| (ii) அறிவுரைப் பகுதி: மலைப்பொழிவு—(அதி. 5—7) | |
| 3. விண்ணரசு போதிக்கப்படுகிறது | 8—10 |
| (i) நிகழ்ச்சிப் பகுதி—(அதி. 8, 9) | |
| (ii) அறிவுரைப் பகுதி—(அதி. 10) | |
| 4. விண்ணரசின் தன்மை | 11—13:52 |
| (i) நிகழ்ச்சிப் பகுதி—(அதி. 11, 12) | |
| (ii) அறிவுரைப் பகுதி: உவமைகள்—(அதி. 13:1—52) | |
| 5. விண்ணரசின் அமைப்பு | 13:53—18 |
| (i) நிகழ்ச்சிப் பகுதி—(அதி. 13:53—17) | |
| (ii) அறிவுரைப் பகுதி—(அதி. 18) | |
| 6. விண்ணரசின் வருகை | 19—25 |
| (i) நிகழ்ச்சிப் பகுதி—(அதி. 19—23) | |
| (ii) அறிவுரைப் பகுதி: இறுதிக் காலம்பற்றிய அறிவுரை—(அதி. 24, 25) | |
| 7. இயேசு பாடுபட்டதும் உயிர்த்ததும் | 26—28 |

## முக்கிய போதனை

மத்தேயு எழுதிய சுவிசேஷத்தின் அடிப்படைப் படிப்பினை மற்றைய சுவிசேஷங்களைப் போன்றதே. கடவுளின் மகன் இயேசு இவ்

வுலகில் கடவுளரசை நிறுவவும், மனுமக்களை மீட்கவும் புரிந்த செயல்கள், ஆற்றிய அறிவுரைகள், அவரது மரணம், உயிர்த்தெழுதல் முதலியவற்றையெல்லாம் இச் சுவிசேஷம் விவரிக்கிறது.

ஆனால், மத்தேயு இந்த அடிப்படையான படிப்பினையைத் தம் சொந்த முறையில் அறிவுறுத்துகிறார். அவர் யூத மக்களுக்காக எழுதினதால் இயேசுவின் வாழ்க்கை பழைய ஏற்பாட்டின் இறைவாக்குகளையும் சட்டங்களையும் நிறைவேற்றுகிறது என வலியுறுத்துகின்றார். "திருச்சட்டத்தையோ, இறைவாக்குகளையோ அழிக்க வந்தேனென்று நினைக்கவேண்டாம். அழிப்பதற்கன்று; நிறைவேற்றுவதற்கே வந்தேன். உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்; விண்ணும் மண்ணும் ஒழிந்துபோகுமுன் திருச்சட்டத்தின் ஒரு சிற்றெழுத்தோ, புள்ளியோ ஒழிந்துபோகாது; எல்லாம் நிறைவேறும்" (5 : 17, 18) என்னும் இயேசுவின் சொற்களை மத்தேயு ஒருவர் தாம் எழுதியுள்ளார். உண்மையாகவே இயேசுவின் இச்சொற்களை மத்தேயு தம் விருது வாக்கியமாகக் கொண்டார் எனக் கொள்ளலாம்.

இதனை வலியுறுத்தவே, மத்தேயு தாம் எழுதிய சுவிசேஷத்தை, நம் ஆண்டவரின் தலைமுறை அட்டவணையிலிருந்து தொடங்குகிறார். இவ்வாறு அவருடைய சுவிசேஷத்தின் தொடக்கத்திலிருந்தே இயேசுவின் பணி பழைய ஏற்பாட்டில் ஆழமாக ஊன்றியுள்ளது என்றும், இயேசுதாம் தாவீதின் குலத்திலுதித்த மலர் (ஏசாயா 11 : 1, 10), ஆபிரகாமுக்கு வாக்களிக்கப்பட்ட வித்து ( ஆதி 13 : 16; 17 : 8; கலா 3;16) என்றும் காட்டியுள்ளார். பெத்லகேமில் இயேசு கன்னித் தாயிடம் பிறந்தது. (1:23), அவரை எகிப்துக்குக் கொண்டு சென்றது (2.15), கலிலேயாவில் அவரது பணி (4:13-16), அவர் செய்த புதுமைகள் (8:17:11:4,5), உவமைகளின் வாயிலாக அவர் செய்த போதனைகள் (13;14), எருசலேமில் அவரது புகழ்பெற்ற நுழைவு (21:4,5), இவையனைத்தும் இயேசுவின் இறைவாக்குகள் நிறைவுறுதலை எடுத்துக்காட்ட மத்தேயுவுக்குத் தகுந்த காரணங்களாகும். சிறப்பாக, கூறியபடி (52 : 13—53 : 12) ஆண்டவராகிய கடவுளின் துன்புறும் ஊழியர் இயேசுவே ஆவர். அவருடைய தாழ்ச்சி (மத். 12:18-21; ஏசாயா 42:1—4), பாடுகள், பாவப்பரிகாரப் பலி (மத். 26 : 56; 27:9) முதலியவைகளும் இறை வாக்குரைஞரால் அறிவிக்கப்பட்டிருக்கின்றன.

மத்தேயு எழுதிய சுவிசேஷத்தில் வரும் வேறு பல தொடர்கள் பழைய எற்பாட்டிலுள்ள இன்னும் பல மேற்கொள்களையும் குறிப்புகளையும் எடுத்துக்காட்டுகின்றன. அவையனைத்தும் ஒரே நோக்கத்தை வெளியிடுகின்றன. அதாவது, புதிய ஏற்பாடு பழைய ஏற்பாட்டினது

(இதன் தொடர்ச்சி 28-ஆம் பக்கம் பார்க்க)

# பின்வாங்கிப் போனவர்கள் மெய்மனஸ்தாபப்பட்டு கர்த்தரிடத்தில் வந்தால் ஏற்றுக் கொள்வார்

கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவரைப் பின் பற்றுபவர்கள் உலக காரியங்களில் அளவுக்கு மீறி ஈடுபாடு கொள்வது உசிதமல்ல. அப்படிப்பட்டவர்கள் பிதாவை விட்டுத் தூரமாய் விலகிப் போவதுடன் ஆழமாய் பாவத்தில் சிக்கித் தவிக்கிறார்கள். தாங்களே தெரிந்து கொண்ட வழியிலிருந்து எவ்வளவு தூரம் விலகி விட்டார்கள், என்று உணராமலே நாட்கள் கடந்து விடுகின்றன. திடீரென்று அவர்கள் வாழ்க்கையில் ஒரு திடுக்கிடும் சம்பவம் நேரிடுகிறது. அப்போது அவர்களுக்குத் தாங்கள் பாவத்தில் சிக்கியிருக்கும் நிலைமைத் தெளிவாய்த் தெரிகிறது. தூங்கிக்கொண்டிருக்கிறவன் அயர்ந்த நித்திரையிலிருந்து விழிப்பது போல் தங்கள் வாழ்க்கையை சீர்தூக்கிப்பார்க்க நேரிடுகிறது.

சாத்தான் கிறிஸ்துவைப் பின் பற்றும் ஒருவரை மெல்ல மெல்ல கீழ் நோக்கி அழைத்துச் செல்லும் போது அந்தப் பாதையில் ஆழம் முதலில் நமக்குத் தெரிவதில்லை. தேவனுக்கு முன் ஆன்மீக வளர்ச்சி தேய்த்து தெய்வீக வல்லமை முற்றிலும் எடுபட்ட பின்னரே தான் நெடுதூரம் கீழ்நோக்கி வந்து விட்டதை உணருகிறான். அன்பு விசுவாசிகளே! உங்களில் சிலர் கிறிஸ்துவை "முழு நிச்சயமாய் நம்பி" ஆன்மீக மீட்பு பெற்றீர்கள், ஆனால் தற்சமயம் நீங்கள் வெகுதூரம் அவரை விட்டுப் பிரிந்து பாவத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறீர்கள். தேவனுக்கு விரோதமாக உங்கள் வாழ்க்கை முறையைத் திருப்பி விட்டீர்கள்; குற்ற உணர்வு உங்களைத் தாக்குகிறது. தீமைகள் உங்களை நெருக்குகிறது, மேற்கூறிய அறிகுறிகள் உங்களில் யாருக்காவது தென்படுமாயின் அந்தக் கட்டுரையில் தேவனை நோக்கி திரும்பி வரும் வழியினை விவரிப்பது உங்களுக்கு உதவியாயிருக்கும்.

"கிறிஸ்துவைப் பின் பற்றுகிற ஒருவரின் வீழ்ச்சி, எரிந்து கொண்டிருக்கும் தீபம் அணைவதுபோல் நேரிடாது. தண்ணீர்த் தேக்கி வைத்திருக்கும் பாத்திரத்தில் ஒழுக ஏற்பட்டு மெதுவாகக் கசிவது போல் அது நடக்கும்." என்கிறார் ஜியாஜ் ஸ்விட்டிங் (Ceorge Sweeting) என்னும் அறிஞர்.

மேற்கூறிய உதாரணம் வழுவிப் போகிறவர் நிலையை நன்கு விளக்கமாய்க் கூறுகிறது, கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒருவர் தனக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்களை தமக்கு உரிமையாகக் கிடைக்க வேண்டியது தான் என்று எண்ணாமல் தேவனுடைய கிருபையே அதற்குக் காரணம் என்று உணர வேண்டும். சில சமயம் ஏதோ ஒரு

ஆத்மீக பெலவீனத்துக்குக் கவனக் குறைவால் இடம் கொடுப்பார். நித்தியத்துக்குரிய ஸ்தானத்தை அழிந்து போகும் உலகக் காரியங்களுக்குக் கொடுக்கத்தொடங்கும் போது கிறிஸ்துவைப் பின் பற்றும் ஒருவரின் வாழ்க்கையில் கசிவு ஏற்படத்தொடங்கும். எனினும் பிதாவிடம் மன்னிப்புக்கேட்டு மீண்டும் கிறிஸ்துவைப் பின் பற்ற எண்ணங்கொள்ளுபவர்களுக்கு வழி என்றும் உண்டு. அவர்களைச் சர்வ வல்லவர் ஏற்றுக்கொள்ள ஆவலாயிருக்கிறார். அவர் ஒவ்வொருவர் மேலும் அன்பும். கரிசனையும் உடையவராயிருக்கிறார். நம்மைத் திரும்பவும் மீட்டுக்கொள்ள கருணையாயிருக்கிறார்.

தேவனிடம் திரும்பி வர தீர்மானித்தவுடன் அந்த வழியை நோக்கவேண்டும். வேதாகமத்தில் வெளிப்படுத்தின சுவிசேஷத்தில் யோவான் இதைக்கூறுகிறார். என்றும் உயிரோடேயிருக்கும் கிறிஸ்துவை எபேசு சபையினருக்குத் தெரிவிக்கும் போது கிறிஸ்துவின் வார்த்தைகள் மூலமே திரும்பி வரும் வழியும் காட்டப்படுகிறது. வெளிப்படுத்தல் 2:5ல் "ஆகையால், நீ இன்ன நிலைமையிலிருந்து விழுந்தாயென்பதை நினைத்து, மனந்திரும்பி ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக; இல்லாவிட்டால் நான் சீக்கிரமாய் உன்னிடத்தில் வந்து நீ மனந்திரும்பாத பட்சத்தில் உன் விளக்குத் தண்டை அதனிடத்தினின்று நீக்கி விடுவேன்" என்று கூறப்பட்டிருக்கிறது. இந்த வசனத்திலிருந்து தவறிப் போன விசுவாசி மீண்டும் தேவனிடத்திற்குத் திரும்பி வரும் வழி தெரிகிறது.

அதற்கு நீ என்ன செய்ய வேண்டும்?

- கிறிஸ்துவோடு இணைந்திருந்ததை நினைத்துப் பார்.
- பாவத்தை அறிக்கையிட்டு மனந்திரும்பு.
- உன் வாழ்க்கையைப் புதுப்பித்துக் கொள்.
- தேவனிடத்தில் மீண்டும் திரும்பி வந்து அவரைச் சேர்:

(26-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆவலின் நிறைவு என்பதேயாம். கிறிஸ்து நிறுவிய திருச்சபையே வாக்களிக்கப்பட்ட அரசும், பழைய இஸ்ராயேல் மக்களின்சிறப்புரிமைக்கு வழித்தோன்றலுமாகும்.

எனவே, மத்தேயு எழுதிய சுவிசேஷத்தின் நோக்கங்களும் அமைப்பு முறைகளும் தெளிவாகத் தோன்றுகின்றன. அவர் புதிய விதிமுறைகளைப் பழைய விதிமுறைகளுடனும், ஆண்டவரின் வாழ்க்கையைப் பழைய ஏற்பாட்டில் எதிர்பார்க்கப்பட்டவைகளுடனும் ஒன்றை மற்றொன்றின் உதவியால் அறிந்து கொண்டு முரண்பாடின்றி ஒப்பிடுகிறார். "விண்ணரசில் சீடனான மறைநூல் அறிஞன் எவனும், தன் கருவூலத்தினின்று புதியனவும் பழையனவும் எடுக்கிற வீட்டுத் தலைவனுக்கு ஒப்பாவான்" (மத். 13:52) என்று இயேசு விவரிக்கும் பொழுது, புனித மத்தேயுவைத் தனிப்பட்ட முறையில் நினைத்திருக்க வேண்டும்.

YOUR ATTENTION PLEASE:

# Radio Sri Lanka Broadcasts

**ENGLISH** The Voice of Truth—Speakers: Reggie Gnanasundaram, J. C. Choate, John Stacy.
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 3815, New Delhi-110049.
Mondays-9:00to 9:15 P. M'
Fridays-7:45 to 8:00 P. M.

**HINDI**—Satya Susamachar-Speaker: Sunny David.
All correspondence should be sent to Satya-Susamachar, Post Box 3815, New Delhi-110049.
Tuesdays-9:00 to 9:15 P. M.
Thursdays-9:00to 9:15 P. M.
Fridays-9:00 to 9:15 P. M.
Sundays-12:45 to 1:00 P. M.

**TELUGU**—The Voice of Truth-Speaker: Joshua Gootam
All correspondence should be sent to The Voice of Truth, Post Box 80, Kakinada-533001.
Sundays-2:30 to 2:45 P. M.
Tuesdays-2:30 to 2:45 P. M.
Thursdays-2:30 to 2:45 P. M.
Fridays-2:30 to 2:45 P. M.
Saturdays-2:30 to 2:45 P. M.

**TAMIL**—The Way of Truth-Speaker: P. R. Swamy.
All correspondence should be sent to The Way of Truth, Post Box 8405, Bangalore-560084.
Tuesdays-5:30 to 5:45 P. M.
Thursdays-6:45 to 7:00 P. M.
Sundays-6:45 to 7:00 P. M.

**MALAYALAM**—The Voice of Truth-Speaker: P. K. Varghese
All coresspondence should be sent to Church of Christ Thevally, Quilon-9 (Kerala.)
Tuesdays,3:45 to 4:00 P. M.
Fridays-3:45 to 4:00 P. M.

**KANNADA**—The Voice of Truth –Speaker: Robert Rathnakar
Box No 448, Bangalore-560004
Sunday: 1-45 2-00 P. M.

ALL ARE ENCOURAGED TO LISTEN

Bible Correspondence Courses and Christian Literature are available in these different languages from the addresses listed. Also the radio sermons are available in book form.

# வாசக அன்பர்கள் கவனத்திற்கு.

வளர்ந்து வரும் திருமறை ஆசானின் கடிதத் தொடர்புகளை சிறந்த முறையில் நிர்வாகம் செய்வதற்கு வசதியாக நமக்கு ஒரு தபால் பெட்டி கிடைக்க தேவன் உதவி செய்தார்.

சென்ற இதழில் கொடுக்கப்பட்டிருந்த தபால் பெட்டி எண் 310 என்பதை 58, என்று திருத்திக்கொள்ளும்படி அன்பாய்க் கேட்டுக் கொள்கிறோம்

இனிமேல் உங்கள் கடிதங்களையும் இதரத் தொடர்புகளையும் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புமாறு கிறிஸ்தவ அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.


ஆசிரியர்
திருமறை ஆசான்.
தபால் பெட்டி எண்: 58
ஈரோடு-638 001.

Published by Church of chirst and Printed bySri. vela E V. Rajamanickam at vela Printers, Erode-638 001. Phone: 74878
Editor. E. Z. Selvanayagam.

If undelivered please return to:
The Editor
THIRUMARAI AASAAN.
2, Manal Medu Street,
ERODE-638 002 (or)
Post Box No: 58. ERODE-638 001.

TO
J.C. CHOATE,
C/o. SUNNY DAVID,
C/2 N.D. SE II,
NEW DELHI-110 049.

PRINTED M...



BOOK-POST